196/350

உ

ஸ்ரீ பழநியாண்டவர் துணை.

அகஸ்தியருல் இடும்பன்கடம்பன் உபதேசம்பெற்ற

# ஸ்ரீ பழநி ஆண்டவர் :: :: பால்காவடி நாடகம்.





கொறத்தி இருமம்
வை. வீரப்ப படையாட்சி
அரங்கேற்றியதை

வெளியிட்டவர்
V. K. M. அருணசல செட்டியார் சன்,
புத்தக வியாபாரம் & ஜெனரல் மர்ச்சண்ட்
திருப்பாதிரிப்புலியூர்.

காப்பிரைட் ரிஜிஸ்டர்)

விலை அணா 12

Akastiyaral Itumpan Katam...
-Pan Upatecam Perra Sri Palani Antavar Natakam

உ

சக்திவேல் துணை.

அகஸ்தியருல் இடும்பன் கடம்பன் உபதேசம்பெற்ற

# ஸ்ரீ பழநி ஆண்டவர் - - பால்காவடி நாடகம்

இவை

கூடலூர் தாலுக்கா டவுன் செம்மண்டலம் மகா-ள-ள-ஸ்ரீ
ஜோதிடம் அண்டு வைத்தியம்

S. M. ஆதிமூல படையாக்ஷியாரால், இயற்றியதை

தேவனாம்பட்டணம்

இரஜகோபால் உபாத்தியாருல்
திருத்தப்பட்டு

By Ātimūlapaṭaiyākṣiyār (Ed. Grn)

கூடலூர் தாலுக்கா திருத்திரையூர் போஸ்டு
கொறத்தி கிராமம் நாடக ஆசிரியர்

வை. விரப்ப படையாச்சியாருல் அரங்கேற்றப்பட்டு

திருப்பாதிரிப்புலியூர்
V. K M. அருணாசல செட்டியார் சன்,
புத்தக வியாபாரம், & ஜெனரல் மர்ச்சண்ட்
வெளியிட்டது

திருப்பாதிரிப்புலியூர்.
ஸ்ரீ லக்ஷ்மிவாசன் பிரஸில்
அச்சிடப்பட்டது.

காப்பிரைட் ரிஜிஸ்டர்] விலை 0—12—0

FEB 1958
MADRAS

உ

செல்வக்கணபதி துணை.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத்ததிபர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில் ;—கடலூர் தாலுக்கா டவுன் செம்மண்டலம் மகா-௱-௱-ஸ்ரீ ஜோதிடம் அண்டு வைத்தியம் எஸ் எம் ஆதிமூல படையாட்சி யாரால் இயற்றிய அகஸ்தியரால் இடும்பன் கடம்பன் உபதேசம் பெற்ற ஸ்ரீ பழநிஆண்டவர் பால்காவடி நாடகம் ஆகிய இப்புத்தகத்தை கடலூர் தாலுக்கா கொறத்தி கிராமம் வை. வீரப்ப படையாட்சி அவர்களிடம் சகல சுதந்திரமும்பெற்று அடியிற்கண்ட என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தை மகாகனம் பொருந்திய கவர்மெண்டார் அவர்கள் சட்டப்படி காப்பிரைட் செய்திருக்கிறேன். ஆகையால் இப்புத்தகத்தை என்னுடைய உத்திரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை தெரியப்படுத்தியிருக்கிறேன்.

இப்படிக்கு,

V. K. M. அருணாசல செட்டியார் சன்,

புத்தக வியாபாரம் & ஜெனரல் மர்சசண்ட் திருப்பாதிரிப்புலியூர்

---

## நாடக நடிகர்கள்

நடிகர்கள்:—

அசுரேந்திரன்
இடும்பன்
கடம்பன்
நாரதர்
பரமன்
சுப்ரமணியர்
அகஸ்த்தியர்



நடிகைகள்:—

இடும்பாவதி
வள்ளி
தெய்வயானை
பார்வதி

---

இயற்றியவர்
S. M. ஆதிமூல படையாட்சி
செம்மண்டலம்

அரங்கேற்றியவர்
வை. வீரப்பன் ஆசிரியர்,
கொறத்தி கிராமம்

26 FEB 1958
MADRAS

அகஸ்த்தியருல் இடும்பன் கடம்பன் உபதேசம் பெற்ற

# ஸ்ரீ பழநி ஆண்டவர்

## பால்காவடி நாடகம்.

விநாயகர் துதி

ஓமெனும் பொருளின்மீது உலாவிடும் முதல்வனை
காமமே புசித்தேன் ஞான நல்வாக்கு தாவே மோன
தாமரை மீதிலோங்குஞ் சண்முகன் சரிதைபாட
மாமதவே ழன்றுளை மனமதிலிருத்தி னேனே

தேவனும்பட்டணம் T. R ராஜகோபாலன் சாற்று கவி

முக்கனியுஞ் சர்க்கரைபால் பசுநேதன் நெய்யு
முப்படைக்காய் பாலுடனே பருப்புங் கூட்டி
இக்கதனிஞ் சாறு சற்கண்டளைநே
எடுத்த சுவைக் கட்டியினு மினிக்கும் வேலன்
தக்க திருவிளையாடல் செய்த காதை
தமிழோங்குஞ் செமமண்டலத் தனிலுலாவும்
அக்கினியின் குலதிலக ஆதிமூலம்
அவைபுருகு நாடகமாய் செய்தான் மாதேசா

அசுரேந்திரன் வருகிற கவி

ஆதியில மகேந்திரந்தன்னை அரசாண்ட சூரதீரன்
வாதியாம் யிந்திரனை தம்பி வசுறநக் கதிகவீரன்
நீதியாய் மந்திரிமார்கள் நிலைபெற்று அவையில் தாழ
சோதியாய் மேனிவீ சசுரேந்திரன் வருகின்றானே

தரு

அரக்கர்குலம் விளங்க சிறக்க வலுவைப்பெற்ற
அசுரேந்திர தீரன் வந்தான் (அ
ஆசையாய் மந்திரி நேசமாய் சூழ
பரக்கும் ரிருதரெல்லாம் பணிந்து யெந்தனைப்போற்ற
சுருள்] பாசமா யிருபுரம் சுஷாமலைறபோட
தேசொளிர் மாதர் சங்கீதமும்பாட (அ
டமாரங் கொடுகுகொம்ப குமருஞ் சல்லரி போட
அமறர்களனைவோரும் அஞ்சிட் பயந்து ஓட
சுருள்] ஆரும் இவனுக்கு யிணையில்லை யென்று
தேரும் வகைக்கொரு பதில்மொழி நன்று (அ

பதித்த நவரத்தின | பதக்கந் தளதளென்ன
பாரியப் புஜகீர்த்தி | ஆரம் பளபளென்ன
சுருள் ] பத்திபத்தியாய் | வீரர்கள் சூழ
இத்திசை தனனிலே | எவருமே தாழ (அ
தேயுரு வானமாது | மாயை தனையளித்த
தூயசிவனே யென்ன | சுத்தவீரர்கள் பன்ன
சுருள் ] சூரபத்மனின் | குலமது போக
வேறுதிக்கிலே | யென்றுமே வேக (அ

கடவுள் வாழ்த்து கவி

மிக்கவே கைலாயத்தில் விளங்கிடும் பரமநாதா
தக்கசீர் பார்வதிக்கு தாங்கிடந் தந்தபோதா
இக்கணம் யெனது செங்கோல் இடாது வராமல் காற்க
முக்கண்ணு வுந்தன்பாதம் பொழிபெற வணங்கினேனே

வசனம்

அருளோங்கிய கைலாயத்தின் கண்ணிலே உமாதேவி சமேதராக அமர்ந்தருளிய ஸ்ரீ ருத்திரபெருமானது பாதத்தை என்னளும் இடையராது எனது செங்கோலானது ஓங்கும் பொருட்டு வணங்கினேன் ஆயினும் நமது நகர வளப்பத்தினை விசாரிப்போம்.

தேச விசாரணை தரு

மந்திரியே நம்முடைய | மாநகரில் மும்மாரி
சந்தங் குறைவில்லாமல் | சாற்றியே வருகின்றதா
ஓதுமறை வேதியர்கள் | சாதனங் குறைந்திடாமல
போதமுடன் என்னளும் | பூசனை புரிகின்றாரா
ஆலயங்க ளாருகாலம் | அன்னை வேததியமும்
சீலமுடன் விழாவெய்தி | சிரோங்கி வருகின்றதா
நிருதர்க ளனைவோரும் | நீதிமுறை பிசகாமல்
தருகுமிரை குறைவின்றி | தந்தடி பணிகின்றாரா

ஷெ கவி

ஆருயிர்த் துணைவரான அமைச்சரே அரையக்கேளீர்
சீருள்ள நமதுதேச செழிப்பு கேட்கமகிழ்ந்தேன்
பேருலகாளுதற்கு பிள்ளையொன் றில்லாதாலே
சோருதே உடலமெல்லாம் சுகம்பெற வழிகாணேனே

ஷெ தரு

குலம்விளங்க ஒருபலநதைக் காணேனே மந்திரிமாரே
மூலையை நினைந்தால்மனம் உருகுதேமெழுகுபோல் மந்திரிமாரே
கலகமது நேர்ந்தாலே காண அரிதாகுமோ மந்திரிமாரே
கதிக்குனன் என்செய்வேன் விதிக்கும் பிர்ம நமைப்போ
மந்திரிமாரே

பலந்தரும் வேலனால் பார அசுரர்மாண்டார் மந்திரிமாரே
பக்குவ உபதேசி சுக்ராச்சாரியுங் காணேன் மந்திரிமாரே
நலம்பெற ஒருவனை நாட வழிதோணேன் மந்திரிமாரே
நமது தாயாதியிந்திரன் தமதுள்ளங் குளிர்ந்தானே மந்திரிமாரே

ஷெடி கவி

சூரர்களனைவோரெல்லாம் சுப்ரமண்யரால் மாண்டுவிட்டார்
பாரினில் குலம் விளங்க பாலகர் ஒருவரில்லை
வீரனும் ரிடும்பன் தம்பி மிகுபல கடம்பனை
தீரர்கள் தனையுங்காணேம் தெய்வமே யென்னசெய்வேன்

வசனம்

ஆனால் கேளும் மந்திரிமார்களே சூரபத்மாதிகள் அனைவரும் சரவணபவனாகிய சுப்ரமண்யருடைய சத்திவேலால் உயிர் துறந்தார்கள் இனி யிந்த அசுராதி வர்க்கம் விர்த்திக்க வழியில்லாமல் போய்விட்டது தவிரவும் மாயை சொற்படிக்கு சூரபத்மாதிகளுக்கு வில்வித்தை போதித்துவந்த இடும்பன் கடம்பன் என்னும் இரண்டு விருதி வீரர்கள் யிருந்தார்கள் அவர்களையுங் காணேமே இதர்க்கு யென்ன செய்வேன் தெய்வமே

பொது வசனம்

இவ்விதமாக அசுரேந்திரன் விசனமுற்றிருக்கும்போது சுப்ரமண்யருடைய சத்திவேலுக்காகப் பயந்து மேருகிரியில் தவஞ் செயதுகொண்டிருந்த இடும்பன் கடம்பன் வருகிற விதம் காண்க.

இடும்பன் வருகிற கவி

சங்கரியாள் ரூபியெனுஞ் சத்திவேலன் தனக்காகப்
பயந்துமனம் நடுநடுங்கி
அங்கமது வெருத்திடவே மேருதன்னில் அருந்தவங்கள்
அநேகநாள் செய்துமீண்டோன்
எங்கிருந்த போதிலுமே தனிகைநாதன் இனிவிடப்போறதில்லை
யென்று யேங்கி
தங்குலத்து அசுரேந்திரன் தன்பால்நாடி தயங்கிமனம்
மயங்கிடும்பன் வருகின்றானே

தரு

அசுரர்குல இடும்பா சூரனு வாரேன்
அவனி லுரைமன்னர் மன்னர்க்குவீரன்
பசுபதியின் பாதம் மறவாதீரன்
பங்கையனின் விதியோ னொன்றுங் தேரேன்
சுருள்] பத்தினி இடும்பா வதியுடன் தம்பி
சித்தமுங் கலங்கிட மெத்தவு வெம்பி (அசு

அறுமுகனால் அரக்கர் குலமுமான
அலைகுலைந்து நிலைதடு மாறிமீள
தருவுடனே மிருகம் பட்சிகள் மீள
தடமும்பல இடமுந் திரிந்துநாளே
அருள்] தங்கியே பேருவில் தவமது புரிந்து
அங்கமுவாடியே அருந்துயரடைந்து (அக
சூரபத்மன் மாயின் விற்குருவு மானேன்
சூழ்வினையால் யேழை மதிபோலானேன்
வீரமெல்லாம் விட்டு தியங்கலானேன் சத்தி
வேலதனக்கு மீளும் வகையுந்தோனேன்
அருள்] வேரெனக்காதார வென்றுமே யேங்கி
சீர்பெற மேருவை விட்டுமே நீங்கி (அக
சுகமடைய மகேந்திரந் தன்னையே நாடி
சுரேந்திரபதி இடமே செல்லவே ஓடி
அகமதுவும் அஞ்சி நடுங்கி வாடி
அண்ணல் வேலன் குண்ண செய்வானே தேடி
அருள்] அந்தரி பாகனே சுந்தர தியாகனே
எந்தனையாதரி விந்தைவன் மீசனே (அக

ஷடி கவி

உலகுயி ரனைத்துக்கெல்லாம் ஒருமுதலாகிநின்ற
இலகிய கைலைநாதா வெழிபெரு நாமந்தன்னை
தலைமிசை சூடியுந்தன் தாமரைப் பாதமென்னும்
விலகிலா நோக்கத்தோடு மென்மேலும் பூசித்தேனே

வசனம்

ஆனல் நானும் என் தம்பியும் மாயையின் சொல்பிரகாரம் சூரபத்மாதியர்களுக்கு வில்வித்தை முதலானதுகளும் கற்று கொடுத்து நல்ல புத்திமதிகளை சொல்லியும் கேளாமல் அக்கர்மங்கள் செய்து சக்திவேலால் மாண்டுபோன தல்லாமல் மறுபடியும் இன்னம் ராட்க்ஷச வம்சம் எங்கிருந்தாலும் கருவறுப்பேனென்று சுப்ரமண்யக் கடவுள் தேவர்களுக்கு சேனாதிபதியாக விருதபூண்டு யிருக்கிறார் அதுவிஷயமாக தப்பிக்கும்படியான சில வசனம் பேசவேண்டி யிரும்பதால் என் தம்பியாகிய கடம்பனை காணும் அதி சீக்கிரமாக சென்று அழைத்து வாருங்கள் மந்திரிமார்களே.

கடம்பன் வருகிற கவி

அண்டமொடு மெண்டிசையு நடுங்குந்தீர
அண்ணனென்னை வாவழைத்த சேதிகேட்டு
சண்டறமே பயந்தொடுங்க தனுவாளேந்தி
சக்கரவாள கிரியைப்போல் உக்கிரமீரி

துண்டரவர் தங்களையே வதைக்குஞ்சூரன்
சுப்ரமண்யர் வேல்தனக்கா யொடுங்கியஞ்சி
கண்டவர்கள் மதிமயங்க தமையன்முன்னே
கடம்பனின்னா விரைவாக வருகின்றானே

தரு

அண்டர்யாவரும் அஞ்சியொடுங்கிடவே கடம்பாசூரன்
அகில நடுங்கிட வந்தேனே
சண்டமாருதம் மரங்கொம்புகள் விண்டலந்தனில் கொண்ட [டிடியென
பிண்டிபாலமுந் தண்டுமேங்கியே கணடுதமையனை தெண்டஞ் செய்திட (அ

தாருகன் சிங்கன் சூரபத்மனுக்கு வில்வித்தை தன்னை
தரணி கெடிபெற தாகளித்தவனும்
பாரில்முருகனை வேண்டிநின்றவர் பரமன் பாதந்தனைதொழுபவர்
ஆறு மெதிரிலா அண்ணனழைத்திட ஆக்கிரமித்திதே சீக்கிர மாகவே [அ

கெதிகொள வுணர்குலக் துதித்தவனும் அண்டங்களெல்லாம்
குமறி பொடிபட குலாவி வருபவனும்
கதிர் உதித்திடும் வேளை தன்னிலே கர்த்தன் பூசையை [செய்வேன் முன்னிலே
அதிர பூமியுந் தாண்டிநடந்துமே அன்புகொண்டுமே தென்பாய் துடந்துமே (அ

எனது தமையனும் என்னையழைத்திடவே வேகமதாக
ஏகுவேன் இக்ஷணந் தழைத்திடவே
மனதின் மர்மந்தன்னை யறியவே மலரதனில் தொண்டுபுரியவே
கனமிகும்பணி கலகலெனறிட காலில்வெண்டயம் ஒலமிட்டிட (அ

கடம்பன் தர் சரு

அண்ணா சரணம் உன்னிடபாதம நண்ணா தருணம்
அண்ணாஉன் பாதத்தில அரும்பு மலர்கள சாற்றி நேசமாகவே
சுருள] ஆசைதம்பியும் துசிலாமலே பூசை புரிந்துமே (அ

இடும்பன் சரு

தம்பியே வாழி தரணிதன்னில் தாழ்வில்லா நீடூழி
வெம்பியே சண்முகன் வேல்தனக் கஞ்சிநாம் சுற்றியே
சுருள்] வெங்கானந் தனிலேங்குஞ் அங்க மெலிந்துளம் மங்கி வாடுறோம் (தம்

கடமபன் தரு

விதிகடன் போமோ எனதுஅண்ணா மதிகெடலாமோ
கதிர்வடி வேலவன் ககநத்தி லுறைந்தாலுங்

சருள்] கண்டுகும்மையே துண்டஞ் செய்குவான்
அண்டி பிழைவதை உண்டோ அறிகிலேன் (விதி
மகேந்திரமாளும் அசுரேந்திர மகிபனை நாளும்
சுகம்பெற அண்டியே சுப்ரமண்யன் யேவும்
சருள்] சூரியனொளி விரிவேல் கொலா
ஆருயிரது தேரி பிழைக்கலாம் (மக

வசனம்

ஆனல் கேளுந் தம்பி கடம்பனே நாம் பலகாலும் இப்படி பரதவித்துக் கொண்டிருந்தால் யாது பிரயோசனம் ஆனல் நமது உயிர் தப்பிக்க ஓர் வழியுண்டு அதாவது நம் முன்னோர்களில மகேந்திரத்தில் அசுரேந்திரன் இருக்கின்றார் அவரிடம் சென்றால் யேதாவது உபாயம் சொல்லுவார் ஆதலால் அங்கு செல்லுவோம் கடம்பனே.

இடும்பன் தரு

அதிவித தம்பியே வாடா நாம்
அன்பாக மூவருஞ் செல்லுவோம் ஜோடா
பதிதனை விட்டுமே நீங்கி சோதி
பால வடிவேலன் தனக்காக யேங்கி
துதிபெரும் மகேந்திரந் தேடி
சுரேந்திரன் தன்னையே துணையாக நாடி
கதியென்று நம்பியே உய்ய மனங்
கலங்கியே வந்தோமே புலங்கெட துய்ய அதி

இடும்பன் தர் தரு

அசுரேந்திரா உந்தன் அடியினை போற்றினேன்
அனுதாபம் புரிவாயே எந்தனுக்குந்தன்
மனதன்பு தருவாயே

அசுரேந்திரன் தரு

குரைகழல் போற்றின நிரைமன திடும்பனே
தரைமிசை நீடூழி உடன் சோதரன்
இறையருளால் வாழி

கடம்பன் தரு

வாழிநீர் தந்ததால் வாழ்வினை நீங்கினோம்
வாடியே யிருப்பதென்ன மனமெலிந்து
தேடியே வந்தோமன்ன

அசுரேந்திரன் தரு

வந்ததா லானந்தம் புந்தி மகிழ்ந்தேந்தனின்
மணிமுடி யுணவாயே இப் பதியினை
துணிவுட னுள்வாயே

இடும்பன் கவி

அய்யனே சொல்வேன்கேளும் அசுராதி வர்க்கமெல்லாம்
துய்யனுக் தணிகைநாதன் சுடர்வடி வேலால்கொன்று
பையவே மிகுதியோரைப் பதைக்கவே வதைக்கவேண்டி
செய்யனே பார்த்திருக்க சீர்முடி யாளப்போமோ

வசனம்

ஆனல் கேளும் அசுரேந்திரர் தணிகாசலனுகிய சுப்ரமண்ய ரானவர் சூரபதமாதியின் வம்சத்தை அனைத்தும் ஒழித்து பின்னும் வேறு யாரகிலும் இருக்கின்றாரவென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க நான் தங்கள் வார்த்தையின்படிக்கு முடிசூட்டிக் கொண்டு ஆண்டுவந்தால சத்திவேலானது என்னை விடப்போறது கிடையாது ஆகையால் நாங்கள் தப்பிக்குப்படியான உபாயம் யேதாகிலும் சொல்லவேண்டும் அசுரேந்திரா

அசுரேந்திரன் கவி

அப்பனே வேலனாலே ஆயாசப் படவும்வேண்டாம்
தப்பிக்கும் விதங்களான தந்திர மூரைப்பேன்கேளும்
செப்பெரு முருகனுக்கு சீடனும் பொதிகைநாதன்
இப்பவே அவர்பாலேகி இருந்துயிர் சுகித்திடீரே

வசனம்

ஆனல் கேளும் இடும்பன் கடம்பனே இதற்காக துயரம் வேண்டாம் அந்த சத்திவேலுக்கு மீளும்வகை ஒன்று உண்டு அதாவது சுப்ரமண்ய சுவாமிக்கு பொதிகை முனியாகிய அகஸ்தியர் சிஷனானதால் அவரிடம் சென்று உங்கள் குறையை சொன்னுல் காப்பாற்றுவார் கேசர்களே.

இம்டும்பன் வசனம்

அப்படியே சென்று வருகிறோம அசுரேந்திரா.

பொது வசனம்

இவ்விதமாக இடும்பன் கடம்பன் பொதிகமலையை நாடி வருக இப்பால அகஸ்தியர் பக்தர்கள் சூழும்படிக்கு வருவது.

அகஸ்தியர் வருகிற கவி

அதிகுண பூசைசெய்து அரனையே துதிக்க வல்லோன்
துதிமிகு ருத்ராச்சமாலை தூயவெண் ணீரணிந்தோன்
பதியில்உண் மாசுநீக்கி பஞ்சாக்ஷரம் பூசித்துள்ளேன்
பொதியமா மலையகஸ்திய புனிதரும் வருகின்றாரே

தரு

அகஸ்திய மகாமுநிவர் வந்தார்
ஆகமவேத புராண விதியதை
மருத்துவ முனிவருக்குத் தந்தார்
ஜெகத்தில் மும்மலமென்னும் சிக்கை யருத்தநாதன்
தினமுஞ் சிவநாமத்தை சிந்தையில் மறவாபோதன்

அருள்] ஜீவகாருண்ணிய மானவினோதன்
பாவபுண்ணியம் பகுத்தறி நீதன் (அக
இகபர நிச்சயமய யருத்தோன்
இருவினைப் பயனதை அறிவினாலுணர்ந்து
முருகன் திருவருள் நிறைந்தேன்
மகதவ யோகிகள மாதேவர் யாரானும்
அருள்] மலரடி தன்னிலே நலமுடன் பணிவேன்
விலையில்லா பொருளின் நிலைகண்டு களிவேன் (அக
பரிவாய் ருத்ராக்ஷ மாலையாட
படிவினில் பூதியங் கடிமணம் வீச
அரிமான் புலித்தோ லாடை நீட
விரியுஞ் சடையிலங்க விளங்குந் தண்டு துலங்க
அருள்] வில்வலனோடு வாதாவியை ஒழித்தவர்
தொல்புவி தன்னிலே வல்வினை கழித்தவர் (அக
அரிய செம்மண்டலத்தில் வாசன்
அக்கியின் கோத்திரந் தங்கி யுலாவிடும்
ஆதிமூலமென்னும் உல்லாசன்
கிரியோன் சுப்ரமண்ணியன் சிந்தைக் குபதேசிக்க
அருள்] செப்பிய பாடலின் தப்புதல் கண்டு
மெய்ப்பொருளாகவே ஒப்புதல் கொண்டு (அக

கடவுள் வாழ்த்து கவி

அருவாகி உருவாகி அருவுருவதிவாகி அகிலப்றபஞ்சமாகி
அருளாகி யிருள் நீக்கும் வொளியாகி வெளியாகி ஆனந்த காக்ஷி
குருவாகி மருவாகி குவலயந்தானாகி குமரகுருபரனாகி [யாகி
சரியாக மயிலேறி விளையாட யெனையாள சண்முகா வருவாய்
[போற்றி

வசனம்

அரூபியாகியும் சொரூபியாகியும் அறுமுகத்தை யுடையவராகியும் அண்டபிண்ட சராசரம் அனைத்துமாகியும் அஞ்ஞானமாகிய இருளை நீக்கும் ஞான ஒளிவாகியும் மும்மல மகற்றிய முனிவராலுங் காணமுடியாத தூய பரமானந்த சோதியாகியுமுள்ள எனது ஞானார்த்த குருவாகிய சாக்ஷாத் ஸ்ரீ சிவசுப்ரமண்யருடைய பாதாரவிந்தத்தினை என் சென்னிமிசை சூடினேன் அருகில் வீற்றிருக்கும் சிஷர்களே.

இடும்பன் தரு

அகஸ்திய முனியைநாடி அண்ணன் தம்பி இருவர்கூடி
சுகமடைய மனதிலெண்ணியே இடும்பாசூரன்
துரிதமாக நடந்துவாறானே
காடுமலை மேடுபள்ளம் நாடுநகர் தன்னைதாண்டி

வாடியே மனங் கலங்கியே — இடும்பாசூரன்
வல்வினையை போக்கவாரானே
கன்னிகைமைந்தன் வேல்தனக்காய் — அங்கமு நடுநடுங்கி
துங்க முனிதன்னைத் தேடியே — அசுரேந்திரன்
சொற்படி விரைவாய் ஓடியே
பொதிகமாமலையைக்கண்டார் புந்தியிலானந்தங் கொண்டார்
சதியது துலைந்ததென்றானே — கடம்பனோடு
தவமுனி முன் வந்து நின்றானே

இடும்பன் கவி

விரிமறைப் பொருளே ஞானம் விளங்கிடுமருளே மோன
துரியநல் நிலையரிந்த தூயமாதவனே யுந்தன
பரிவுள்ள பாதந்தன்னில் பன்மவர் தனைசொரிந்து
வரியவன் கரங்குவித்து வணங்கினேன் வணங்கினேனே

வசனம்

மறையாகிய வேதாகாம வியாவு முணர்ந்து துரியாதீத மென்னுஞ் சுயஞ் சோதியைக் கண்டரிந்த சுத்த சன்மார்ககமுள்ள முனியோரே தங்கள் பாதத்திற்கு வந்தனம் புரிந்தோம் சுவாமி.

அகஸ்தியர் கவி

வணங்கியே நமஸ்கரித்த மகிபல இடும்பாசுரந்தன்
அணங்கியா ளிடும்பியோடு அருமை தம்பியரும்வாழி
மணங்கமழ் பொதிகைநாடி மலர்முகம் மெலிந்துவாடி
இணங்கியென் அடிபணிந்த இயல்பென்ன சொல்லுவீரே

வசனம்

ஆனல் யென்பாதத்தை பணிந்தபடியால் நீயும் மனைவி தம்பி கடம்பன் ஆக மூவரும் சுகமாக வாழ்வீர்கள் உங்களுடைய மலர் போன்ற முகமானது வேறாகி இந்த பொதிகமலையை நாடி வந்த காரணம் யாது இடும்பனே.

இடும்பன் தர் தரு

என்ன விதங்கள் — சொல்லுவேன்
எங்களின் குறையதை — சங்கையா உமக்கு
ஏது விதங்கள் விள்ளுவேன்
பன்னக மணியீசன் — பாலன்விட்ட வேல்தன்னை
சருள்] பார்க்க பயமாகுதே — வேர்க்க உடலமெல்லாம்
தீர்க்கயை நினைந்தாலே ஏக்கங்கொள்ளுதே சுவாமி (என்

அகஸ்தியர் தரு

அவரை வெல்லவும் — போகுமோ
அறுமுகன் பெருமையை — திருமாலயனான்
எவருஞ் செயல்லவு ஆகுமோ
சுவர்க்க லோகத்தினில்வாழும் சுகுண தேவ ராஜனும்

அருள்] ஆக்ஷியரிந்து சொல்ல ஆக்ஷியாகுமோ வெல்ல
மாக்ஷிமை யரிந்துநீ தாக்ஷி யடைந்துமென்று

இடும்பன் தரு

இதற்குநா னென்ன செய்வேனோ
ஏங்குதே என்மனந் தாங்கொணு கவலையால்
குதர்க்கம் வருமே உய்வேனோ
பதைக்குதே பெத்தனுவி பாலகன் போலேயெண்ணி
அருள்] பாரும் பிழைக்கவகைக் கூறும் யிதுசமயம்
யாதுமுங் களைவிட வேறு துணையுமில்லை

அகஸ்தியர் தரு

சிந்தை தளர வேண்டாமே
சிவதுதி தன்னையே கவனமாய் புரிந்திடில்
நொந்து துயரந் தீண்டாமே
கந்தன் கை வேல்வந்து உந்தனை மடிக்காது
அருள்] காக்ஷி கைலைபுஷ்பம மீக்ஷிதினங் கொணர்ந்தால்
தாக்ஷி வராதுனக்கு ஆக்ஷிதனை யுரைத்தேன்

இடும்பன் கவி

சொன்னதோர் மொழியைப்போ லதுகளில்லா பணிகள்செய்ய
அன்னைதாய் தந்தையென்று அரிவையா ளுடனேகூடி
வன்னிமான் தரித்தயீசன வளர்பதம் தனைபூசிக்க
பன்னரும் புஷ்பந்தந்து பணிந்துமே யிருக்கின்றோமே

அகஸ்தியர் கவி

இடும்பனே உனக்குயேவல் இயம்புவேன் கைலைக்கேகி
கடிகமழ் கொன்றைதும்பை கருத்துடன் நீகொணர்ந்தால்
அடவியில் கடம்பன்சென்று அன்புடன் சமிதைக்கொண்டு
திடமதாய் பணிகள்செய்ய செந்திரு வேல்வராது

வசனம்

கேளுமப்பா யிடும்பனே நீங்கள் யென்ன செய்யவேண்டு மென்றால் நீ கைலைக்குச் சென்று பரமன்பூசைக் குரிய புஷ்பங் கொண்டு வரவேண்டும் உன் தம்பி கடம்பனும் உன் மனைவியும் கானகஞ் சென்று சமிதையும் காய்கனிகளும் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டு பக்தி புரிந்துவந்தால் உங்களை அந்த சத்தி வேல் தொடாது இடும்பனே அவ்விதம் செய்வீர்கள் (அப்படியே செய்து வருகிறோம் சுவாமி.

இடும்பன் கவி

அதிப்ல தம்பிகேளாய் அருமுனி சொற்படிக்கு
சதிருடன் வனத்தில்சென்று சமிதைநீ கொணர்ந்தால்யானே
கதிதரு மீசன்வாழுங் கைலைக்கு விரைவிலேகி
துதிமிகு புஷ்பங்கொண்டு துரிதத்தில் வருகுவேனே

கடம்பன் வசனம்

அப்படியே தங்கள் உத்தாரப்படிக்கு சென்று வருகிறேன் அண்ணு தாங்கள் கைலைக்குப் போய்வாரும்.

இடும்பன் தரு

பொதிகமாமலை தன்னைவிட்டுமே இடும்பாசூரன்
புண்ணியம்பெரும் கைலைநாடியே
பதிபுகழ் குருவார்த்தை கேட்டுமே மலர்கள்கொய்ய
பக்தியுடன் ஓடிவாருனே
நதிமலைக் குகைசுனைகள் தாண்டியே இடும்பாசூரன்
நடைநடப்பதுங் காற்றைப்போலவே
எதிர்வருபவர் இடைந்து சாயவே பூசைகள்செய்ய
எழில்பெருந்தனி ரெடுக்கவாரானே

கடம்பன் கவி

எனதருந் தபையநாரும் யீசன்வாழ் கைலைசெல்ல
கனமிகுக குருபுகன்ற கட்டளை சிரமேற்கொண்டு
வனமதி லேகியானும் வளம்பெரும் சமிதைக்கொய்து
மனவேக மாகத்தானே மகிழுடன் வருகுவேனே

ஷை தரு

வனமதில் நடந்தானே வடவனல் போலவே திடமுள்ள [கடம்பன்
நினைவுடன் தொடர்ந்தானே
வனபதில் நடந்தானே திசைசரி வீதம்போல
வினையருங் குருநாதர் விளம்புங் கட்டளைப்படி
ஆறுஞ் சுனையுடனே அடருங்கானகந்தன்னில்
சீறும் புலிகாடி சீறுஞ் சிம்பங்கள்வாழும்
காட்டி லலைந்துதர்ப்பை காட்டமதினைல்கண்டு
வாடடமுட னருந்து கூட்டி சுமையெடுத்து
நாரிபாகனின் பூசை மீரி விடுமேயென்று
சாரிதாய நடந்து வீரியமுடன் கடந்து

ஷை கவி

வேதமா முனிவர்க்கெல்லாம் விளங்கிடு முதல்வேஞானப்
போதமே தாங்கள்செய்யும் பூசைக்கு சமிதைக்கொண்டு
தீதர வந்தேனுங்கள் திருவடி காணவேண்டி
மாதவத் தோரே அண்ணன் வரும்வேளை யாகுந்தானே

வசனம்

சருணம் சருணம் குருநாதரே வனத்திற்கேகி சமிதை முதலான வஸ்துக்களை கொண்டு வந்துவிட்டேன் கைலைக்குச் சென்ற அண்ணன் இடும்பாசூரன் வரும் நேரமாகிவிட்டது பூசையை முடிக்கலாம் ஞானதீபமே.

பொது வசனம்

இப்பால் கைலையை நாடிச்சென்ற இடும்பன் வெள்ளியங்கிரியைப் பார்த்து ஏகென்று சொல்வது.

இடும்பன் கொச்சகம்

தொல்மறைகள் சூழ்ந்திலங்குஞ் சூலபாணி தான்வசிக்கும்
பல்வளமும் பெருகும்வெள்ளி பார்வதமுங் கண்டறிந்தேன்
வில்வமுடன கொன்றைதும்பை வெட்டிவேர் மருக்கொழுந்து
நல்வாசம் வீசுகின்ற நலமதைப்போல் ஞான்காணேன்

ஷை தரு

ஆகா ஏனென்று சொல்லுவேன் இந்த
அற்புத மிகுமலர் சொற்பெரு கைலயின
அதிசயம் யென்று விளளுவேன்
ஒக்கா இதனைக்காண உளமிக மகிழ்ந்தேனே
உலக மனைத்துமிங்கு துலங்குதென் றறிந்தேனே
உத்தமனார் சித்தபடி நத்திவந்த முத்தன்பதி (ஆகா
பாகாரினிமிகும் பண்புளள ரோஜா
பரிகாந்தி நந்தியா வட்டமும் பேஷா
வாகா மல்லிகை முல்லையுங் காசா
வளர்மிகு கொன்றையுங் தும்பைவில வேசா
வகுத்து அகத்துரைக்க செகத்து ஒருவருண்டோ (ஆகா

ஷை கவி

நாடியே யிங்குவந்து நலமிகும் கைலைபுஷ்ப
வேடிக்கைப் பார்த்திருந்தால வீண்காலங் கழியுமென்று
ஆடிய பாதாவென்று அநேகபுஷ் பங்கள்கொய்து
தேடியே குருவின்பாதந் தெரிசிக்க வந்திட்டேனே

வசனம்

ஆனல் நாம் இங்கு வந்து வேடிக்கைப் பார்த்திருந்தால் காலதாமதமாகும் இதோ பரமன் பூசைக்குரிய புஷ்பமெல்லாம் எடுத்துக் கொண்டோம் குருவின் பாத காணிக்கையாக செலுத்தும்படி செல்கிறேன் சருணம் சருணம் குருநாதரே தங்களுடைய உத்தரவுபடிக்கு கைலாயம் சென்று சிவகிரி விசையகிரியென்னும் இரண்டு மலை யிருக்கின்றது அங்குள்ள புஷ்பங்களைக் கொய்து வந்தேன் சுவாமி

அகஸ்தியர் வசனம்

ஆனல் கேளுங்கள் சீஷர்களே நாம் பரமனைக் குறித்து பூசிக்கிறேன் நீங்கள் ஜாக்கிரதையாக காவல் புரிவீர்கள்.

அகஸ்தியர் பூசை தரு

பூசை புரிவோம் வாருங்கள்புலமதை யொடுக்கியே
நலம்பெற நாமும் பூசை புரிவோம் வாருங்கள்

பூசை புரிவோம் வாரும்   ஈசன் தனையேநாடி
வீசுங் கொன்றையுந் தும்பை   வில்வ மலர்கள்சூடி (பூ
சுத்தி ஓமங்கள் வளர்ப்போம்   சுபமுடன் நெய்யதை
சுத்தி ஓமங்கள்   வளர்ப்போம்
சுபமுடன் நெய்யதை   சமிதையும் நிறைத்து
மெத்தயீசனை துதிப்போம்
பத்தியுடனே ஆதி   சத்தி சிவன்பாதத்தை
நித்த மனதில்வைத்து   சுத்தசன் மார்க்கமாக (பூ

அகஸ்தியர் கவி

பூசையும் புரிந்தோமாச்சு புகழ்பெரும் இடும்பாகேளாய்
நேசமாய் புஷ்பங்கொய்து நீவந்து தருவதற்கு
ஆசனே அநேகநாழி ஆகுதே விரைவிற்சென்று
பாசமாய் மலைகள் தன்னைப் பற்றியே பெடுத்துவாராய்

வசனம்

ஆனல் கேளும் இடும்பனே நீ கைலைக்கேகி புஷ்பங் கொண்டு வருவதற்கு அதிக நேரமாகிறபடியால் பூசைவேளை தவறி விடுகின்றது ஆகையால் நீ சென்று சிவகிரி விசையகிரி ஆகிய இரண்டு மலைகளையும் எடுத்துவந்தால் வேளை தவறுமல் பூசை புரியலாம் அன்பனே.

இடும்மன் தரு

சிவகிரியைத் தானெடுக்க   செப்ப வந்தீர் நாதா
சீர்பெருங் கைலையில்பேங்   செல்லுமோ சாவேதா
அவமதிப்பாய் விசையகிரி   அனைவிள்ளப போமோ
ஐயனேநான் உங்களுக்கு   அதிசஞ் சொல்லலாமோ

அகஸ்தியர் தரு

புத்தியுள்ள பாலனென்று   மெதவுநானரிவேண்
சித்தமுங் கலங்கவேண்டாம்   திருமந்திரந்தருவேன்
சத்துஉள்ள மந்திரத்தால்   வெற்றிநீயிம் பெருவாய்
பற்றுதலாய் சுப்ரமண்யர்   பலனதுவே உருவாய்

இடும்பன் கவி

தந்தருளு மந்திரத்தால்   சிந்தை களித்தேனே
தடமிகு மலையெடுக்க   திடமூடனே நானே
எந்தவழியாக சென்று   எடுத்து வருகுவேனே
இன்னவகை யென்றனக்கு   இயம்புவீர் சீமானே

அகஸ்தியர் தரு

விந்தகிரிதனை தாண்டி   விரைவாய் செல்லும் வீரு
விலவலனை கொணறவழி   வெகுநேராகுஞ்சிரா
அந்தமிகுங்கிரவுஞ் சத்தை   அதஞ்செய் ததின்னேருய்
அரிய வெள்ளியங்கிரியை   அடையலாமே பாருய்

இடும்பன் கவி

சற்குரு நாதா தந்த சடாக்ஷர மந்திரத்தால்
மற்புய வலிமைபெற்றேன் மலைகொண்டு வருவதற்கு
சொர் பெரு கிரியிரண்டை தோள்காவடி யாயெடுத்து
எப்படி வருகுவேனோ இதற்கொரு வகைசொல்வீரே

வசனம்

ஆனால் தேவரீர் எனக்கு உபதேசித்த மந்திரத்தால் அடியேனுக்கு பலம் அதிகமாகிவிட்டது ஆனாலும் சிவகிரி விசையகிரியாகிய அந்த மலையை எந்தவிதமாக எடுத்துக்கொண்டு வருவேன் குருநாதா.

அகஸ்தியர் கவி

இடமிகு வலுபடைத்த பீஷனே மந்திரந்தன்னை
அடவுடன் செபித்தாயானால் அருமறைப் பிர்மதண்டம்
கடுகினில வந்துசேரும் கழிகயி றாகக்கட்டி
தடப்பெருந் தோளில்தூக்கி சடுதியில் வருகுவாயே

வசனம்

ஆனால் கேளும் இடும்பனே நான் உபதேசித்த சடாக்ஷர மந்திரத்தை ஜெபித்தாயானால் நான்கு வேதங்களும் ஓர் பிர்ம தண்டமும் உன் முன்னால் வந்துசேரும் அந்த பிர்மதண்டத்தை கழியாகவும் வேதம் நான்கையும் கயிறாகவும் சேர்த்து சிவகிரி விசையகிரி இரண்டு மலைகளையும் காவடியாகக் கட்டித் தூக்கிக் கொண்டுவந்து சேரும் அன்பனே.

இடும்பன் கவி

அயன்மாலும் புகழும்நாதா அடியிணைப் பணிந்தேன்வேதா
தயவது வைத்தநீதா தனையனு மகிழ்ந்தேன்போதா
நயமொடு வழிகாண்பித்த நல்குரு வாக்கின்போல
பயமிலா கிரியைக்கட்டி பற்றியே வருகுவேனே

வசனம்

ஆனால குருநாதரே தங்கள் வாக்கின்போலே சென்று வருகிறேன் சுவாமி.

பொது வசனம்

இப்பால் இடும்பன் கைலாயம் போகும்படிக்கு பிரயாணப் படுகிறபோது இடும்பாவதியானது சொற்பனங் கண்டு கணவனைக் காணும்படிக்கு வருவது காண்க.

இடும்பாவதி வருகிற கவி

ஆடையும் பரிமளிக்க ஆரங்கள் மிகஜொலிக்க
வாடைகள் கமகமென்ன வஞ்சியர் கண்களிக்க
பேடைபோல் நடைநடந்து பிரியமாய் கணவன்பக்கல்
ஜாடையை யரியவேண்டி தயலா ளிடிம்பிவாருள்

தரு

அடரும் உலகந்தன்னில் அரிவையர்க் கபிமானி
இடும்பா வதியாளென்னும் ஏந்திழை வாருள்
கடக கங்கணந்தன்னை காகபூஷணமின்ன
திடம்பெரும் இடும்பன்பாரி தெரிவையும் வாருள்
விடையேறு மீசன்தேவி மெல்லடி மறவாமாது
நடையிலன்னமுமென்ன நங்கையும் வாருள்
புடைவில் மிகுதியான நடையோங்கும் செம்மண்டலம்
உடலமாரி பாதபபோற்றி உத்தமி வாருள்

இடும்பாவதி கவி

என்னிடத தாதிமாரே இயம்புவேன் வார்த்தையொன்று
பன்னியே அமுதமுண்டு படுத்துநா நூங்கும்போது
கன்னியான் கினவுகண்டேன் கலக்கமு மாகிநெஞ்சம்
அன்னமே சோருதம்மா அதன்பல னரிகிலேனே

ஷை தரு

அம்மணினான் யென்னசொல்லுவேன் சொற்பனந் தன்னை
அரிவையேநான் யென்னசொல்லுவேன்
அம்மணினான் யென்னசொல்லுவேன் அங்கமும் பதருதடி
பெம்மா னருளிதுவோ பிதருதே யென்மனது (அ
தவமுனி சொற்படிக்கு சிவகிரி தனையெடுக்க
சதிவந்து நேரும்படி விதியோனான் கண்டனு
சிவகுரு நாதனோடு செருசெய்ய கண்டேனடி
தவருகள் நேருமோ தாக்ஷியை யறிகிலேன்
இகபரத்தில் நாதனை இழந்து விடுவேனோதான்
அகமது வாடுதே ஆகாத சொற்பனத்தை (அ

இடும்பாவதி வசனம்

இந்த விதமாக நான் பொல்லாத சொற்பனங்கள் கண்டபடியால் எனக்கோ மனமானது அதிக கவலையா யிருக்கின்றது அதனால் என்ன ஆகுமோ தெரியவில்லை மன்னவர்பால் சென்று இதன் விபரத்தை தெரிந்துகொள்ளுவோம் தாதிகளா

இடும்பாவதி கவி

என்னரும் பிராணநாதா எழிலுரு பாதந்தன்னில்
பன்னரும் புஷ்பகொண்டு பாவையாள குவித்தேன் தாங்கள்
அன்னமும் புசித்துவேனா ஆயுத பாணியாக
மன்னவா போறசேதி மாதினுக் குரைத்திடீரே

இடும்பன் தரு

அடியனைப் பணிந்தமானே ஆசீர்வாதந் தந்தேனே
அன்பு பெருகிவாழ்வாய் பெண்மயிலே
சுருள்] அருமுனி சொற்படி கிரிகளை யெடுத்திட
துரிதமதாகவே தோகையே யேகுறேன்

இடும்பாவதி தரு

எவிவாரே னென்றபோதே ஆகமுங் கலங்கிடுதே
ஏது மரியாயோ என் பிராணநாதா
சுருள்] எங்கு நிறைந்திடும் தங்கமே லுனே
அங்கம் பிளந்திடு சங்கதி யுணருவீர்

இடும்பன் தரு

சங்கையேனோ உந்தனுக்கு மங்கையர்க் கரசியானே
சற்குரு பெருமைதன்னை தெரியாயோ
சுருள்] சடாக்ஷர மந்திர கடாக்ஷ மிருக்க
உடாக்ஷியே மீறி தடாக்ஷியே பேசுறாய்

இடும்பாவதி தரு

பேசவில்லை உன்னிடத்தில் தேசுமறை மீதிலாடும்
பிசகயன் மானுருவாய் இகத்தில வந்தாரே
சுருள்] இது தெரியாமலே மதி தடுமாறுதீர்
சதியென்னை விட்டுமே கதிதனை நாடுதீர்

இடும்பன் தரு

சொந்தக்கணவனிடம் தூரியேபேசுறாய் பெண்மயிலே
மந்திர சக்தியில் மாதேதவமிருடுக்கமே பெண்மயிலே

இடும்பாவதி தரு

மந்திரதந்திர மாயசித்துயெல்லாம் பிராணநாதா
சந்தமேதிரிலே கால்மாரியாடுமோ பிராணநாதா

இடும்பன் தரு

சந்தமேவல் யென்றுமே எந்தனுக்கன்னடி பெண்மயிலே
சிந்தைமகிழ்குரு தேசிகனுக்குமே பெண்மயிலே

இடும்பாவதி தரு

தேசிக னென்றுமே வீசாது வீசுரீர் பிராணநாதா
காசினி தன்னிலே கலகங்ளை சரியிரோ பிராணநாதா

இடும்பன் கந்தார்த்தம்

பிழைமோசம் வருகுமென்று பினைத்தாய் யெந்தன்காதில்
நுழையாது உந்தன்வார்த்தை நூலறிந் தவள்போல்பேச
அழையாத வீட்டிற்குள்ளே அழைக்குமுன னேகும்போல
கழைகூத்தர் பாட்டைகொண்டு

தரு

காட்டி கைநீட்டி பேசுறாய் தாசிகள்போல
ஆட்டி நீட்டியே வீசுறாய்
வீட்டிலுள்ள மாதர்கள் வெளிவந்து பேசலாயோ
விருதாவாய்க் குலைக்குறாய் குருவார்த்தை தள்ளப்போமோ
சுருள்] வேல்விழியாளேநீ ஜாலம் செப்யாதே
காலநு ரேகநீ மேலுமுய்யாதே

இடும்பாவதி கந்தார்த்தம்

மனத்துய ரடைந்துவாட மங்கையென் சொற்பனத்தால்
அனர்த்தங்கள் நேருஞ்சொன்னேன் அரிவையாள் வார்த்தைமீறி
பினர்த்துறீ ரதிகமாகப் பித்துகொண்டவரைப் போல
இனத்தையே கெடுங்கோடாலி

தரு

வேணு மிப்படி பேசுறீர் கோபங்கள் கொண்டு
எதிரியென்றுமே வீசுறீர்
நானே விதவையாகி நல்ல சுகமிழந்து
போனு லழகாகுமோ புவியி லிருக்கலாமோ
சுருள்] போதா உரைத்தனே மாதுயென் வார்த்தையை
மோதி தள்ளினல் சாதல் நேருமே

இடும்பன் தரு வேறு

பண்ணிபன்னி யென்முன்னின்று மென்மேலுமநீ பேசவந்தாய்
பாவையே அடிப் பூவையே
கன்னியே யினிமேலுன்னை சின்னுபின்ன மாகச்செய்வேன்
தாவியே செல்வாய் ஏவியே

இடும்பாவதி தரு

மன்னவரே யிப்படிக்கு என்னையும் வெறுத்துப்பேச
மார்க்கமே இது ஏற்குமே
பின்னம்வந்து நேரும்சுப்ர மண்யன்தன வேலினாலே
போகாதே போகலாகாதே

இடும்பன் தரு

குருமொழி தனைகடந்தால் வருவினை யதிசமுண்டு
கொஞ்சுறாய் வார்த்தை மிஞ்சுறாய்
திருமலன் பூசைக்குயிடர் அரிவையேநீ தேடவந்தாய்
நில்லடி எட்டிச் செல்லடி

இடும்பாவதி தரு

அறுமுகன் பெருமைதன்னை இருதயத்தி லுணராமல்
துள்ளாதே துள்ளி விள்ளாதே
சிறுவயதில் பிரணவத்தால மறைமுகனை சிறையடைத்தார்
வல்லவா இன்னஞ் சொல்லவா

இடும்பன் சவி

மீனெறும் வழிபடைத்த மின்னிடையாளே கேளாய்
ஆணாகப் பிறந்தோர்தானும் அச்சங்கள் படுவதுண்டோ
காணவே யெனக்குபுத்தி கன்னியே புகட்டவந்தாய்
நானுமே உணரமாட்டேன் மங்கையே நிற்கொண்ணாதே

வசனம்

கேளும் பெண்ணே இடும்பாவதி நீ யாதோ பல நூல்க ளாகிய சாஸதிர வல்லவிபோல் பேசுகிறாயே சாண் பிள்ளையானு

னும் ஆண்பிள்ளைத்தனம் வாராதென்பார்கள் பெரியோர்கள் அது தெரியாமல் உளறுதே போம்.

இடும்பாவதி கவி

விதியது வந்ததாலல் விலக்கவே மதிகள் வேண்டும்
அதிபல சூரபத்மன் அனைவரை துலைக்கப்பாரில்
கதிர்வடி வேலனாக கர்த்தாவே பிறந்துவந்தார்
பதிலென்ன சொல்லப்போறேன் பாவையுன் பின்வாரேனே

வசனம்

ஆனல் சேனும் பிராணேசா விதியை மதியால் வெல்ல வேணுமென்ற பழமொழியான முன்னோர்கள் சொல்வதுண்டு அப்படியிருக்க சூரபத்மாதியின் மிம்சைத் தாளாது முறையிட்டுக்கொண்டு தேவர்களுக்காக கடவுளே ஆறுமுகம் பன்னிரு கரத்தோடு தோன்றிருக்கின்றார் இது தெரியாமல் பேசுகிறீர் அடியாள் உங்களுக்கு பதிலென்ன சொல்லப் போகிறேன் எப்படியானாலும் ஆகட்டும் கடவுள்சித்தம் யானும் வருகிறேன் நாதா.

இடும்பன் தரு

கோதையே நீயெந்தன் கூட தொடர்ந்தாலே மானே
வாதைகள் நேருமே வஞ்சியே சகிப்பாயே தேனே

இடும்பாவதி தரு

நாதனே உனைவிட நான்பெரி தாகுமோ தேவே
இதுகள் நேர்ந்தாலும் தேவியாள் சகிப்பேனே கோவே

இடும்பன் தரு

சடாக்ஷ மந்திரந் தான்ஜெபித்துக்கொண்டு போரேன்
விடாமல் யெந்தன்பின்னே வேகமாய் நீவரத் தேரேன்

இடும்பாவதி தரு

பதியே தெய்வமென்ற பாவை யெனக்கென்ன பாரம்
மதிகெடு மாறாமல் மங்கையும் பின்வாறேன் நேரம்

போது வசனம

இவ்வாறாக இடும்பனும் தன் மனைவியும் கைலாயத்தை நாடி வருகிறபோது சுப்ரமண்யரானவர் மாங் கனிக்காக தந்தையின் பேரில் கோபித்துக்கொண்டு பரதேசியைப்போல் ஒத்தைக் கோவணத்தோடு தெர்க்கு முகமாக நோக்கி வருகிற விதங் காண்க.

ஸ்ரீ சிவசுப்றமண்யர் வருகிற கவி

ஓமெனும் பிரணவத்தோன் உமைபரு வானவேதன்
ஆமெனும் அக்ஷரததில் ஆடிடும் அமலநாதன்
ரீமெனும் வாக்கியத்தோன் ரிஷிகளுக் குகந்தபோதன்
வாமெனும் மருகனான வடிவேலர் வருகின்றாரே

தரு

சத்தி வடிவேலவர் வந்தார்
சரவண பொய்கையி லறுமுகமாகி
இத்தலத்தோர்க்கு வரம்தந்தார்
அத்தி யுறித்தணிந்த கர்த்தன் மகனாய் வந்தோர்
சுருள்] ஆணவம் மாய்கையை நீக்கியே ஆண்டவர்
காணுககாண பாக்கியம் பூண்டவர் (சத்
மீரும் பிரணவத்தைப் பெற்றேன்
மீதல பூதல பாதல மடுங்கிட
வேதன் தனைசிறையில் வைத்தேன்
ஆறுமரியா வேதம் அமலர்க் குபதேசித்தேன்
சுருள்] அருமுனி யோருக்கு திருவருள் புரிந்தேன்
தெரிவையா ளிருவர்க்கு வரமது தந்தேன் (சத்
வெற்றி வடிவேல் கரத்தில்தாங்கி
வீறுடன் தாருகன் சூரபத்மாகியை
சத்துரு சங்காரஞ் செய்துநீங்கி
தித்திமொழி மாதர்தம்மை தேவியாய் மணந்தேன்
சுருள்] தீங்குள்ள தலைதயும் மாங்கனி தன்னை
யாலகெடத் தமையர்க்கு தரக்கொட பின்னை (சத்
விட்டு
ஆடையணி பூஷணங்கள்
ஆசை வெறுத்துமே தேசியைப் போலவே
தேடியே தெக்ஷணமுகந் தொட்டு
நீருபுகழ் செம்மண்டலம் பாடல்பெறும் வன்னிகுல
சுருள்] நேசன் ஆதிமூலம் பேசிடுங் காதையை
பாசன் ராஜகோபாலனும் மகிழ்ந்தேன்

ஷடி கவி

அரவமணி பணியானு மாங்கனிக்கனிக்காய்
ஐங்கரனோ டென்தனையும் அகிலஞ்சுற்றி
திரமுடனே யாமிருவர் முன்வந்தாலுந் தீங்கனி
தானவர்களுக்கு சொந்தமென்று
கரமுடனே உரைத்திடவு மயில்மீதேரி
காசினியைக் கணமதிலே வலமாயவந்து
தருகும்படி யான்கேழ்க் அருகிருந்த
தந்திமுகன் தனைக்களிக்க தனித்துவந்தேன்

வசனம்

ஆனால் என் தந்தையாகிய பரமசிவம் மாங்கனியால் எனக்கு தீருத கோபத்தை உண்டாக்கின தல்லாமல் என் தாயார் மேலையாளத்தில் பகவதி அவுதாரம் கொண்டு அதர்வண வேதமாகிய மந்திரத்தை தெரியும்படியாக செய்துவிட அவர்களை அடக்கி

ஆளும்படிக்காயும் மேலும் இந்த கயிலாயம் இனி திரும்புவ தில்லை என்றும் ஆடை பணிகளெல்லாம் தாய்தந்தையர் முன் னிலையில் விட்டு போட்டு ஒத்தை கோவணத்தோடு தெண்டு கையில் கொண்டு பூலோகம் நாடி தெர்க்கு முகமாக போக வேண்டியிருப்பதால நீங்கள் யாரும் என்னோடு வரவேண்டிய தில்லை நீங்கள் காஞ்சிபுரம் சென்று எனது தாயாருக்கு துணை புரிந்து முசுகுந்த சக்ரவர்த்தியோடு சம்மந்தம் கொண்டு உலகில் என்னுடையநிலைப்புககாக வருஷம் ஒருமுறை கம்பர்களை நாட்டி சூரர்களை அழித்த பகடல்பாடி செகுந்தர்களாக இருக்கவும் உத்திரவளித்தேன் நீ போய்வாருங்கள வீரபாகு தேவர்களே நான் சென்றுவருகிறேன்

சுபரமண்யர் தரு

ஒத்தைக் கோவணந்தண்டு பித்தனைப்போல்கொண்டு
ஒருவனாக நடந்துவாரேனே நான்
பிரியமாய் தெர்கருக்காக்கி போரேனே
பெத்ததாய் தந்தையுடன் பத்தினிமார்களை
சித்தமதில்வெறுத்து நடந்தேனே ஆதி
கர்த்தன்வாழும் கைலைக் கடந்தேனே
அறுவுரு கற்றியே திருமணி பூஷணம்
அனைத்துந் துரந்துமனந் தெரினேனே
சினத்துடன் தண்டுமேந்தி திரிநேனே
ஆணவங் காமியம் மாயையு மகற்றிய
மோனசன்னி யாசியைப்போல் நின்றேனே எதிர்
தோனுஞ் சிவகிரியைக் கண்டேனே

பொது வசனம்

இவ்விதம் சுப்ரமண்யர் தெற்குமுகமாக வருகிறபோது இடும்பாசூரன் சிவகிரிக்கருகில் பேசுகுதல் காண்க.

இடும்பன் தரு

அலைவிலா குருபாதம தலைமிசை சூடியே
நிலையான வழிகண்டு யேகினேனே சொன்ன
மலையை யெடுக்கமன தாகினேனே

சுப்ரமண்யர் தரு

வடமலைப் போலவே திடமுடன் மீறியே
வருபவன் தீரந்தன்னைக் கண்டனே அவன்
திருவுள்ளம் மாற்ற யெண்ணங் கொண்டனே

இடும்பன் தரு

வினையரும் மந்திரம் நினைவொடு ஜெபித்திட
கனபிர்ம தண்டம்வேதங் கண்டிட்டேனே கிரியை
காவடி யாகக்கட்டி நின்றிட்டேனே

சுப்ரமண்யர் தரு

அன்னாளில் குருமுனி யென்னாலே யரிந்திட்ட
துன்னிய மந்திரசக்தி யறிந்தேனே அவன்முன்
பன்னு மறையோனாகி நின்றேனே

இடும்பன் கவி

குறைவில்லா புகழ்படைத்த குருநாதர் சொற்படிக்கு
வரைதனை யெடுத்துக்கொண்டு வழிகண்டு திரும்பும்போது
மறையவர் ஒருவர்நேரே வந்திடக் கண்டறிந்தேன்
தரைமிசை யிரக்கிவைத்து நாமதிந் தேகுவேனே

வசனம்

நாம் குருவின் கட்டளைப்படி இந்த மலையை யெடுத்துக் கொண்டு திரும்பும்போது யாரோ ஒருவைதப பிராமணன் எதிரே வருகின்றார் சற்று பொருத்துப் பார்ப்போம்.

சுப்ரமணியர் கவி

இதுநல்ல சமையமென்று இடும்பனின் எதிரேசென்று
மதியதை மாற்றிவேறு வழியாக நடக்கச்செய்து
பதிபுகழ் மலையாளத்தின் பக்கத்தில் யிருத்தியானும்
துதிமிக பெருகியோங்க துணைகொண்டு அமருவேனே

வசனம்

பேஷ் இதுதான் தருணம் அவன் எதிரே சென்று நிலைவை மாற்றி வேறு வழியாக நடக்கச்செய்து மலையாளத்தித் கருகில் எனக்குள்ள இடத்தில் அந்த மலையை இறக்கும்படி சொல்லி அவ் விடத்தில் பற்பல சித்தர் முத்தர் பத்தர் யாவருந் துதிக்கும் படியாம் அமரவேண்டும் ஆனதால் பிராமணனைப்போல் சென்று விஜாரிக்கிறேன.

சுப்ரமணயர் தரு

ஆரய்யா யெந்ததேசம் அழகிரிதையக்கொண்டு
சிருடனே யெங்குபோறாய் வீரனே

இடும்பன தரு

ஆதிசிவன் பூஜைக்காக அர்ச்சிக்க புஷ்பம் வேண்டி
அகஸ்திய ரனுப்பவந்தேன் மறையோரே

சுப்ரமண்யர் தரு

எந்தவழி மார்க்கமாக இந்தமலைக் கொண்டுபோறாய்
எடுத்து உரைத்திடுவாய் வீரனே

இடும்பன் தரு

வில்வலன் வாதாவிருவர் வல்லுயி ரொழிந்தவழி
செல்லவே மனதாகினேன் மறையோரே

சுப்ரமண்யர் கவி

மன்னவனே நீசொன் மார்கமெல்லாம்
மாபலம் சூழ்ந்திருக்கும் பாதையாகும்

வன்னி யணியீசரிட பூசைக்காக வரையெடுத்து
அவ்வழியாய் போகொண்ணுது
பன்னுபுகழ் காஞ்சியருணு சலத்தின் பாட்டைக்கண்டு
விருதகாசி மேலே சென்ருல்
சென்னிமலை வேலன் திருவாவினைத்தால் செல்லலாம்
பொதிகைமலை சீக்கிரந்தானே

வசனம்

ஆனுல் கேளுமப்பா வீரனே பரமன் பூசைக்குரிய புஷ்பம் நிறைந்த மலையை யெடுத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாகப் போனபோதிலும் பாபிகள் வழியாகப் போகப்படாது யேனென் ருல் நீ செல்லிய வழியோ வாதாவி வில்வலனுகிய அசுருகிகள யிருவரும் அநேகமான சீவனை வதைத்து உயிரெழந்த பாதை யாகும் ஆனதால் புண்ணிய ஸ்தலமாகிய காஞ்சி அருணுசலம் விருத்தாசலம் திருவாவினன்குடி இந்த வழியாகப் போனுல் சீக்கிரமாகப் போய் சேரலாம் வீரனே.

இடும்பன் கவி

இந்தவிதம் மறைபவருங் கூறக்கேட்டு
பிடிலலா இடும்பனுந்தா னெழுந்திருந்து
மந்திரத்தை தன்மனதித் உச்சரித்து
மட்டில்லா குருபாதம் சிரமேற்கொண்டு
பந்தமுடன் மலையெடுத்து தோளில்வைத்து
பராக்ரமங் கொண்டுமிக வேகமாக
விந்தையுள்ள பொதிகைமுனி தன்பால்போக
விரைவுடனே நடைநடந்து வருகின்ருனே

இடும்பன் தரு

ஆரிய ருரைத்தமொழி போல — நல்ல
அருளோங்கும் காஞ்சியம் பதிகண்டு — மேலே
சிறிலகும் அருணைநகர் தாண்டி, — சோதி
சிவநாமம் மறவாமல் — விருதகாசி வேண்டி
திருப்பரங் குன்றமதைக் கண்டேன் — மேலுங்
திருவாவி னங்குடி — முருகன்துதி கொண்டேன்
வரவர சோருதே மேனி — எந்தன்
வலுவுகள் குன்றுதே — உளமிக நாணி

இடும்பன் வேறு தரு

தேசுபெருங் குருநாதா — தேனின்மிக சொல்கேட்டு
ஆசையுடன் மலைதாக்கி — அறிவழிந்து வாரேனே
கந்தரவா பாடல்பெருங் — காட்சியுடன் திருவருளை
விந்தையுள்ள மலைதாண்டி — விருதநகர் யான்கடந்து
திருவாவி னன்குடிமேல் — சீருடனே வருகயெந்தன்
உருகுலைந்து மெய்மறந்து — ஒடுங்கிமனம் நடுங்கினேனே

ஆசையுள்ள பெண்மயிலே ஆயாச மாகுதடி
பூசைவேளை தவறிவிட்டால் பிழைமோசம் வந்திடுமே
நாகமணி பூஷணனே நானுந்தன் பூசைதன்னை
தாகவிடாய் தன்னாலே தாமதங்கள் செய்துவிட்டேன்
கோபமிக கொள்வாரே குருநாதர் என்மீதில்
சாபம்வந்து நேர்ந்திடுமே சத்திசிவா என்னசெய்வேன்

இடும்பன் கவி

முப்புர மெரித்தயீசா முனிநாதர் சொற்படிக்கு
செப்பெரு மலையைதூக்கி திருவாவினன் குடியில்வந்து
தப்பிலா தெந்தனுக்குத் தயக்கமு மயக்கமாகி
குப்புர இரக்கிவைத்தேன் கோதையைக் காணகிலேனே

சுப்ரமண்யர் கவி

திடம்பெரும் இடும்பன தானுந் திருவாவினன் குடியில்வந்து
தடம்பெரும் மலையைவைத்து தயங்கியே இருக்கக்கண்டேன்
அடவியில் குளத்தைக்காட்டி அப்புர படுத்தியெந்தன்
சடம்பெரும் உருவைமாத்தி தனையன்போ லமருவேனே

வசனம்

இடும்பனனவன் நமக்குள்ள யிடமாகிய திருவாவினன்குடி மேல் வந்து தாக விடாயால் மெலிந்து யிருக்கின்றான் நாம் ஓர் சிறுவனைப்போல் சென்று அந்த மலைக்கருகில் ஓர் தடாகத்தைக் காண்பித்து அவனைப் போகும்படி செய்து நாம் அந்த சிவகிரி யாகிய மலையின்மீது அமரவேண்டும் அவ்விதம் செய்வோம்.

சுப்ரமணயர் தரு

ஒப்பில்லா வீரதீரா இப்படிக்கு வாடுவதேன்
ஊருமுந்தன் பேருமென்ன கூறுமிங்கனே

இடும்பன் தரு

கூறுவேன் குருமுனிக்கு நறுமலர் வேண்டியிந்த
குன்றெடுத்து தாகசோகங் கொண்டுவாடுறேன்

சுப்ரமண்யர் தரு

வாடவேண்டாங் குன்றருகே தேடுமறைப் பொய்கையுண்டு
நாடியே ஜலம்புசித்துன் பிடைதீருமே

இடும்பன் தரு

தீருவேன் எனதுசோகம் கூறிய சலமுமெங்கே
சிறுடனே யானறிய செப்பும் பாலனே

சுபரமண்யர் கவி

செப்புவேன் தடாகமங்கேரே தெரியுதுன் கண்ணால்பாரும்
இப்பவே சென்றுநீயும் இளைப்பார அருந்திவாராய்

இடும்பன் கவி

அப்பனே உனக்குவேண அருளது ஓங்குஞ் சொன்ன
தப்பிலா தடாகங்கண்டேன் ஜலமுண்டு வருகுவேனே

சுப்ரமண்யர் வசனம்

சரி இதுதான் தருணம் நாம் சொல்லியபடிக்கு இடும்பன் ஜலம் புசிக்கும்படி மலையை வைத்துவிட்டு சென்றுவிட்டான் நம் கோரிக்கையை நிறைவேற்றுவோம்.

சுப்ரமண்யர் தரு

இரக்கிவைத்த மலையதனைக் கண்டு யானும்
ஏரியதன் மீதிருக்க சிறுவுருவங் கொண்டு
சிறக்கநமக் கேற்றயிடமென்று சத்து
சிதறுபெருஞ் சிவகிரிமேல பத்தியுடன் நின்று
குருமுனியின் கியானமதைப் போக்கி இடும்பன்
கொண்டுவந்தாரு மந்திரத்தின பலமதனை நீக்கி
திருமலை யெடுக்கமுடியாமல் சூக்ஷி
செய்துநான் மேற்குமுகமாகியே நின்றேன் (இர

இடும்பன கவி

ஆலமுண் குடித்தயீசன் அருளதை மனதிலெண்ணி
பாலகன சொற்படிக்கு பானமுஞ் செய்தேன்வேண
ஜாலமூ மாச்சுதையோ சாபங்கள் வந்துநேரும்
காலமுங் கழிக்கொண்ணாது கடிகினி வேகுவேனே

இடும்பன் தரு சிந்து

இரக்கிய காவடியை யானுமே
எடுத்துநடக்மன தாகினேனே
நெருக்கியே யிருக்கிடவே மலையதை
நெக்கியெந்தன் தோள்கொண்டு பக்குவமுடன்
முழுபலந் தனைகொடுத்து எடுத்திட
முடியவில்லையே யென்று கெடிதியிதோ
பழுதாக வரிவோமென்று பார்த்திட
பாலகன் ஒருவனிதோ ஜாலஞ் செய்குறான்
ஏடா சிறுவனேநீ இதைவிட்டு
இரங்கிடுவாய் உந்தன் உரங்கெடுவாய் (தததோம்

சுப்ரமண்யர் தரு

ஏண்டாநீ கெட்டுப்போறாய் வீரா கீழே
இரங்கவு மாட்டேனடா சூரா
இனியதொரு வார்த்தைசொன்னேன் கனிவுடனே கேட்டுநீயும்
நடவாய் எட்டி கடவாய்

இடும்பன் தரு வேறு

அண்டநடுங்கபூமியதிர ஆட்டீட்டி யெகிரியே
சண்டனைப்போ விடும்பாசூரன் தாண்டி மலையைதூக்கினான்
சிவகிரி யெழும்பவும் விசைகிரி யழுந்தவும்
சீக்கிரமாய் யாசினடுக்க மூர்க்கங்கொண் டெழுந்தனே

சுப்ரமண்யர் தரு

செம்மலை யெடுத்திடாமல் நானே — இதோ
செய்குவேன் சூக்ஷிமிகத் தானே
செல்லுமோ உன தீரம் வெல்லுவேன் அரைநொடிக்குள்
பாராய் சொல்லும் சீராய்

இடும்பன் தரு வேறு

சொல்லுமொழி நல்லதல்ல அல்லலில்லா பாலகனே
சூக்ஷமம் பின்னதென்று அறியாயே
மலவுபுரி யிடும்பாசூரன் வல்லவீர குருமுனிக்கு
சுருள்] மலைதனை கொண்டுபோய் நிலைபெரும் பூசையை
அலவிலா செய்திட சலுகியிலிரங்கிடு

சுப்ரமண்யர் தரு

சின்னபிள்ளை யென்றுசொலாதே எனையே நீ நினைக்கவேண்டாம்
உன்னையுமுன் ஆசான் தன்னை வின்னஞ் செய்குவேன்
சொன்னமொழி கேளுமடா சூரனே இவ்விடம் விட்டு
சுருள்] துரிதமா யுன்னிட குருபதி சேரு
கருதியே நின்றால் கண்டிப்பேன்பாரு

இடும்பன் தரு வேறு

எதடாயித்தனை தீரமே நீயும் வாதுசெய்யவா நேரமே
ஓதடா உன்னிட ஊரையும் பேரையும்
சுருள்] உருளக் கணை மிரளும்படி
திரலாகவே வாசெய்குவேன்

சுப்ரமண்யர் தரு

இடும்பாசூரனே சற்று நில்லடா இப்போ
எடுத்த பாணமெங்கே சொல்லடா
கடம்பனும் அகஸ்தியர் கலந்துமே வந்தாலும்
சுருள்] கண்டித்துனை துணைதிட
தண்டத்துடன் நின்றிட்டனே

இடும்பன் தரு

சின்னஞ் சிறுவனென்று உந்தனை எந்தன்
சிந்தையில் நினைந்து நிந்தனை
பண்ணியே பேசாதே பாரகெதி சேர்க்குறேன்
சுருள்] பாரித்தலை வீரிட்டிட
மேறுக்கிரி நீறுபட

சுப்ரமண்யர் தரு

வளிகம் பேசிய வீரனே உன்னை
தூளிதஞ் செய்குவேன் சூரனே
ஆளிபோல் சீறியே ஆகத்தைப் பிளக்குறேன்
சுருள்] அதிரும்படி உதிரம்வர
பதறித்தலை சிதரிப்பட

### இடும்பன் கந்தார்த்தம்

ஆரடா என்னிடத்தில் அரியாமல் சிக்கிக்கொண்டாய்
பாரடா க்ஷணத்திலுன்னை பற்றியே பாணத்தாலே
கூரடா செய்துமீண்டு குருநாத ரிடத்தைநாடி
சேரடா மலைகள் தன்னை

### இடும்பன் தரு

நிமிஷத்தில் தூக்கிசெல்லுவேன் பயலே உன்னை
சமன்விருந் தாகக் கொல்லுவேன்
சமனுரும் அகஸ்தியர் சாமர்த்தியம் அறியாமல்
அமர்ந்துயிம் மலைதன்னை அழுத்திகொண டிருக்கிறாய்
அணுவமிங்கே செல்லாது காணுமென் கோபம் பொல்லாது
தாணுமென்னிடம் பதில்சொலலாது தோணுமுன் உடலது
[நில்லாது
சருள்] தூரிக் கணையினாலே மீரிப் பொடிபடவே
சோரிபெருகிடவே விரியத்துடனடிப்பேன்

### சுப்ரமண்யர் கந்தார்த்தம்

வெந்தழல் அசுரர்கோபம் வேல்தன்னை விட்டருத்தேன்
தந்தைமாம கனியின்கோபம் தனிதெற்கு நோக்கிவந்தேன்
இந்தசேர் கிரியினமீது யிருக்கவே யெண்ணங்கொண்டேன
கொந்திட ஞூரா உன்னை

### தரு

நோக்கி பிடித்து தூக்கினேன் காகமென்று
போக்கி உயிரை தாக்கினேன்
பார்க்கிறேன் இவனுக்காய் பரிந்து வருவோர் தன்னை
சேர்க்குறேன் சமன்பதி தீர்க்குறேன் கணமதில்
தேடாதேவா யாடாதே ஓடாதேயினி வாடாதே
சாடாதேமனம் வாடாதே கூடாதேபதில் பாடாதே
சருள்] உந்தன் தம்பியுடனே சொந்த மனைவியரும்
சிந்தை கைந்துஉருகி யெந்தனை துதிக்கும்படி

எதிர்பாருங்கள்! கூடிய சீக்கிரம்!! வெளிவருகிறது!!!
ஆஞ்சநேயருல் துரியன் துர்ச்சாதனன்
பங்கமடைந்த
பிரம்மராட்க்ஷதன் பீமன் சண்டை நாடகம்.
விலை ரூ. 1-0-0


பொது வசனம்

இப்படியாக யிடும்பாசூரனுனைவன் தம்பி கடம்பா பெண்ணே இடும்பாவதியென்று அபயமிட்டு மரணமாய்விட அது தருணம் திருலோக வாசியாகிய நாரதர் வருகிறவிதங் காண்க.

நாரதா கவி

கருகிய நூல்களெல்லாங் கற்றுமே உணர்ந்தசீலன்
பரிதிபோல விளங்குகின்ற பரமஞர்க் குகந்தபாலன்
திருகரம வீணையேந்தி தேசதேசங்கள் சுற்றி
வருவிதி உரைக்கவல்ல வண்மைநாரதர் வந்தேனே

நாரதர் தரு

வைகுந்தன் தனக்குப்பேரன் நானே இந்த
வளம்பெரும் உலகினை நிலையுடன் சுற்றும்
வைராக்கியம் தனில் சிறந்தோன் தானே
பொய்யதை சிக்கருத்து மெய்யதை விளங்கசெய்யும்
புள்ளியுங் கொண்டேன் இன்றுதினத்தில் புளகிதம் கொண்டேன்
சுருள்] பசும்பெரும் இடும்பன் புலமதை யரிந்தேன்
மகிழ்வேன் ஞானத்தால் மர்மத்தை அரிந்தேன்
அழகேந்திரா புரிநகரில் சென்று ஒரு
அந்தணன் தன்னையே சிந்தையும் நொந்திட
அடுத்தேன் நவமி இடம் அன்று
பழகும் பழமொழியை பாரில் விளக்கிக்காட்ட
பார்த்திட கலகம் பார்ப்பிணி தனை பழித்திட உலகம்
சுருள்] பாதியிலந்தண ருகிய நவமியும்
மாதை கெடுத்தும் மாய்கைமீய உண்மையும்
மங்களஞ்சேர் குறத்திநகர் வாசன் திரு
மாவடி வேலனின் தாளடி மறவா
மகிழும் வீறப்பனென்னும் தாசன்
எங்கும் போற்றும் பால்காவடி தங்கும்நல் சரிதம்பாடி
ஏற்றிடத்தானே ஆதிமூலம் போற்றிடத்தானே
சுருள்] ஏறிடும் மயிலோனே என்னாளும் மறவேன்
மாறிட மனமதை மாற்றிடப் புரிவேன

ஷை கவி

மாங்கனி கொடுத்துவேலன் மனமதை மாற்றியானும்
தாகுகொண்டு கோபமூட்டி தனிசிவ கிரியில்சேர்த்தேன்
ஆங்காரங் கொண்டிடும்பன் அரிந்திடா தமரில்வீழ்ந்தான்
தீங்கிலா இடும்பிதன்பால் தெரிவிக்க யேகுவேனே

வசனம்

நாம் தர்க்கப் பிர்மா சாபப் பிரகாரம் பிரதிதினமும் செய்யும் கலகாச்சாரப் படிக்கு மாங்கனி ஒன்றை பரமனிடங் கொடுத்து

விநாயகனுக்கும் சுப்ரமண்யனுக்கும் கலகத்தை உண்டுபண்ணி தெற்கே சிவகிரியில் கொண்டுபோய் சேர்த்தோம் அது தெரியாமல் இடும்பன் சமர்செய்து மாண்டான் இதன் விஷயத்தை இடும்பாதேவிக்கு தெரிவித்து இடும்பன் உயிர்பெறும் வகையைத் தேடவேண்டும் செல்லுவோம.

நாரதர் தரு

இடும்பாதேவி தன்னைத்தேடியே நாரதமுனி
இருள்வனத்தை நாடிவாராரே
கடம்பாகனதியர் படுவிதமதனை மனதிலெண்ணி
கன்னிக்குரைக்க ஓடிவாராரே
சதுரிவேலன் தன்னால்இடும்பனும் மாண்டவிதத்தை
இத்தருவி லுரைக்கவாராரே
கானகம் பலவேணகதியுடன் தேசங்கள்தாண்டி
மானின் விழியாள்முன்னே வந்தாரே

இடும்பாவதி தரு

மறைமுனியோரே வந்தனம் உங்கள் பாதத்தில்
மாமலர் சாத்திதந்தனம்
நரைதிரை பிணியுடன் மூப்பு சாக்காடு நீக்கும்
பெரும்புகழ் தன்னையானுமே பேசப்போகுமோ
பெருப்புகழ் தன்னையானுமே

நாரதர் தரு

வாழ்த்தமனமது வல்லையே மகா தொல்லையே (வா
பாழ்த்த புவியிலுன்போல் பாவியான் கண்டதில்லை
பதருதே எந்தன்மனமே எடுத்துசொல்ல
சிதருதே உந்தன்கனமே

இடும்பாவதி தரு வேறு

ஐயையோ இதுவென்ன முனியே
எனக்கருந் துயராகுதே யினியே
பொய்யதைத் தள்ளிய புண்ணிய மூர்த்தியே
மெய்யான காரியம் விளப்புவீர் சித்தியே

நாரதர் தரு

அம்மம்மா யிதுவென்ன தேவி நீயும்
அறுக்கப் போறாயிப்போ தாலி
சும்மா யிருமலே சூரசம் மாரனால்
விம்மியே உன்னுதன் வீழ்ந்திட்டார் பூமியில்

இடும்பாவதி தரு

இதுவென்ன கொடுமையோ நாரதா
எடுத்து உரைத்திடுஞ் சீரதா
மதியது வாடுதே மன்னர் தனக்குமே
சதிமோசம் வந்ததை சாற்றுவீர் விபரமாய்

நாரதர் தரு வேறு சிந்து

அருளுவேன் கேளுமம்மா இடும்பாவதி
ஆசைநாயகன் சேதி நேசமுடனே.
குருநாதர் வார்த்தைப்படி உனது மன்னன்
கொண்டுவரப்போகஞ் சிவகிரி விசையகிரி
திருவாவி னன்குடியில் மயக்கமுற்று
தேங்கியே மலையிரக்கி சோங்கியிருக்க
மாங்கனி தனக்காக வடிவேலவன்
மனதில் வருத்தமுடன் பணியகற்றி
தேங்கியே தேகியைப்போல் கோவணத்துடன்
தெண்டுகரங் கொண்டுமேற்கே அண்டிவருக
கண்டார் சிவகிரியை அதிலிருக்க
கருத்தி லெண்ணியே உரு மறைத்துநின்றார்
துண்டனை இடும்பனுமே சோகந் தெளிந்து
தூக்கிட மலையைவேலன் தாக்கியழுத்த
இதுவென்ன கொடுமையென்று வேலனோடு
எதிர்த்து யுத்தம்புரிய வதைத்தாரம்மா தனனதனதனன

இடும்பாவதி கவி

அருவேளி பரனேயெந்தன் ஆருயிர்ப் பிராணநாதர்
பெருகிய மலையெடுக்கப் பேசியபோதயானும்
சிறுபிள்ளை வேலனாலே செத்துமே மடிவீரென்று
வருமொழி யுரைத்துங்கேளா வந்துயிர் மடிந்தாரையோ

இடும்பாவதி புலம்பல் தரு

ஐயோயென் மன்னவரே ஆவி துறந்திடவும்
அயன்விதித்த விதியோ யென்ன செய்வேன்
மையவே நீருமெந்தன் பனிமொழி தள்ளிவந்து
பாலன்தன் னாலேமாண்டீர் மன்னவரே
செய்யாத பாவமென்ன செய்தேனோ முப்பிறப்பில்
சீருங் குலையலானேன் தெய்வமே
பொய்யான வாழ்வைநம்பி பூரிப் படைந்திருந்தேன்
போகு விதமறியேன் தெய்வமே

இடும்பாவதி தரு வேறு புலம்பல்

காய்கனிகள் தான்பரித்து கண்ணாளா வாருமென்று
வாய்வேக மாகவந்து வல்லுயிர் மடிந்தீரோதான்
பேய்வாழுங் கானகத்தில் பெண்ணாள் வழிநடந்து
தேய்பிறைபோல மேனிகுன்றி திகைதப்பி வாடுறேனே
அரிமுயல் யானைபன்றி வாளரிவாழ் வனங்கடந்து
தோளழகன் தன்னைகண்டு துடிதுடித்து மெலியுறேனே
காளையந்த வேலருன்னை கண்ட துண்டஞ் செய்வாரென்று
நாளையிலே சொன்னமொழி நன்றாய் பலித்ததுவே
மஞ்சளது குங்குமமும் மையுடனே பொட்டணியும்
செஞ்சொல் மொழியிழந்து தேகியைப்போல் நிற்குறேனே

போவென்று தானுரைந்த பொதிகைமுனி நாதருன்னை
வாவென்று கூடிதெழுப்ப வகையரிய மாட்டாரோதான்
சங்கரா கெங்காதரனே சத்தியிடம் வைத்தவனே
அங்கமது வாடிகொந்து அரிவையாளும் மூர்ச்சையானேன்

பொது வசனம்

இப்படியாக இடும்பாவதியானது பலவாறாக புலம்பி மூர்ச்சையயாகிவிட இடும்பன் கூவிய சத்தமானது கடம்பனது காதில் கேட்டு யேதென்று சொல்லுவது.

கடம்பன் கவி

அண்ணனுங் கடப்பாவென்று அழைத்திடுஞ் சத்தந்தானும்
துண்ணெனக் கேட்டதையோ துணைவனுக் கென்னபோதான்
தண்ணருள் புரியுந்தேவா தாளடி போற்றிபோற்றி
குண்ணுதே யெந்தனுள்ளங் குறையறிந் துரைசெய்வீரே

வசனம்

ஆனல் கேளுங் குருநாதரே பூசைக்குரிய புஷ்பம் வேண்டி வரச்சென்ற எனது தமையன தம்பி கடம்பா பெண்ணே இடும்பாவதி யென்று முறையிடுஞ் சத்தமானது கேட்டதே என்ன காரணமோ தெரியவில்லை ஞானததால் பாருங் குருநாதரே.

அகஸ்தியர் வசனம்

அப்படியே பார்க்கிறேன் சரிசரி மோசம் வந்துவிட்டது.

அகஸ்தியர் கவி

மோசங்கள் வந்ததையோ மொழிதருங் கியானங்காணேன்
பாசம்வைத் திடும்பனுக்குப் பழிநீக்க வழியுந்தோணேன்
தேசரி மார்க்கமாகக் கிளம்பிய சத்தம்பூணேன்
தேசிகர் சுப்ரமண்யர் திருவுளப் பலிதாமோ

வசனம்

நடந்த விபரங்களை கண்டறிவோ மென்றால் பூர்வக் கியான முந் தெரியவில்லை இது யென்ன காரணமோ குருநாதரே உன் சித்த விரோதியானேனே சிவகுருவே சரி யெப்படியானாலும் சென்று பார்ப்போம் வாருங் கடம்பனே.

அகஸ்தியர் தரு

கடம்பனே என்னுடன்கூட வாருமே
கத்தின சத்தம் உத்ததை காணேன்
கடுகியே முன்னம் யேகியே பாருமே

கடம்பன் தரு

அய்யனே உன்னருள்படி செல்லுவோம்
அண்ணன் இடும்பன் வண்ணமரிய
அருகினில் சென்றுமே யாமும் வெல்லுவோம்

அகஸ்தியர் தரு

முல்லையுங் குறிஞ்சிவனந் தாண்டியே
முருக்கன்வன்னி தருக்களுரை
கல்லுள்ள மலைகுகை மீண்டோமே

கடம்பன் தரு

பெரியதோர் கிரியிரண்டு காணுதே
பெருமை பெரும் அருமை அண்ணன்
உரியதோர் மதனிதானே தோணுதே

அகஸ்தியர் கவி

அடவியைக் கடந்துவந்து ஆயாச மாச்சுதையோ
விடமது கண்டுபார்க்கும் விபரமுந் தோணவில்லை
தடம்பெருஞ் சிகரமீதில் தன்வளர் சிசுவைகண்டேன்
மடமயில் துயரந்தன்னை மன்னனின் பக்கங்கண்டேன்

வசனம்

ஆனால் கேளும் கடம்பனே நாம் அடவியாகிய கானகமெல்லாங் கடந்து ஆங்காங்கு பார்த்தும் ஒன்றும் புலப்படவில்லை மேலும் நமக்கோ மெத்த இளைப்பா யிருக்கின்றது இதானது சாக்ஷாத் ஸ்ரீ சுப்ரமண்யருடைய மாய்கைதானோ வென்னமோ தெரியவில்லை அதோடு இரண்டு மலைகளிருக்கின்றது அதில் சிவகிரியாகிய மலையில ஓர் சிறு பாலகன் நிற்கின்றான் அதற்கருகில் இடும்பனுடன் இடும்பாவதியும் மூர்ச்சையாகி கிடக்கின்றார்கள் பாரும் கடம்பனே.

கடம்பன் கவி

அண்ணனும் மடியக்கண்டு அலரியே துடிதுடித்து
குண்ணியே மனதுவாடி குலையது நடுநடுங்கி
பண்ணிய பலனீதென்று பதரியே மண்மேல்வீழ்ந்து
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியே புலம்புவானே

கடம்பன் தரு புலம்பல்

அருமையுடைய அண்ணா தரையின்மீது படுத்து
ஆவிதனை யிழந்தாய் அண்ணாவே
உருமையுடைய தம்பி உந்தனைப் பிரிந்திதே
உலகில் இருநாகலாமோ அண்ணாவே
சூரபத் மாதிகட்கு வீரவிற் குருவுமான
பேருமழிந்ததையோ அண்ணாவே
ஆருமெடுக்கொண்ணா பாரகிரியெடுக்க
தூருசெய் தவறோ அண்ணாவே

கடம்பன் கவி

புவனமும் புகழவந்த புண்ணிய குருவேயிந்த
சிவகிரி மலையின்மீதில் சிறுவனும் யிருக்கக்கண்டேன்
அவனாலே மடிந்தாரோதான் யாதொன்றுந் தெரியவில்லை
பவமதை மறந்துயானும் பதரியே வீழ்ந்திட்டேனே

அகஸ்தியர் கவி

கடம்பனும் அண்ணன்பக்கல் கதறியே வீழ்ந்துவிட்டான்
இடம்பெரும் மலையின்மீது யிருந்திடுஞ் சிறுவன் தன்பால்
திடம்பெருங் கிரியைநூக்கி சிரியே யிங்குவந்து
உடம்பெரும் யிடும்பன்வீழ்ந்த உற்றதோர் சேதிகேழ்ப்பேன்

வசனம்

ஆனால் கடம்பன் சகோதர வாஞ்சையால் மூர்ச்சையாகி விட்டான் சரி இதோ இந்த சிவகிரியின் மீதில் ஓர் சிறுபிள்ளை நிற்கிறான் இடும்பன் மாண்ட சேதியை அவனை விஜாரிப்போம்.

அகஸ்தியர் தரு

சிவகிரி தனிலிருக்கும் சிறுவனே கேளும் அப்பா
சிறுவனே கேளும் என்
சிஷ்யனுக்கு வந்ததுறை செப்புவாய் காணும்
அவமதிப்பா எண்ணவேண்டாம் அகஸ்தியர்தானே
ஆரப்பா சிறுவனேநீ வாரும் யிதகனே

கந்தவேள் தரு

சிறுவனென்று எண்ணவேண்டாம் குருமுனியோரே ஐயா
குருமுனியோரே என்னை
தேசமெங்குந் தான்வணங்கும் ஈசனென்பாரே
வரைபுய இடும்பன்தன்னை வதைத்தவர் யாரோநீ
வான்செய்து கேழ்க்கவந்தாய் யேதுந் தெரியேன்

அகஸ்தியர் தரு

தெரியேனென்று சொல்லவந்தாய் சித்துக்காரனே நீ
சீக்கிரம் இறங்கிவாடா யெத்துக்காரனே
அரியயன் யெந்தனைக்கண்டால் அஞ்சுவார்களே வீண்
ஆணவநீ கொள்ளவேண்டாம் காணவே சொல்லும்

கந்தவேள் தரு

சொல்லவந்தாய் சித்துக்காரன் அல்லவானுமே என்றும்
துள்ளிய மறைநீதாடுஞ் செல்வனுருமே
வல்லவா யிரங்குமென்ற தென்னகாரணம்
வலத்தடியை மாத்தேன்யானும் வரைந்தேன் பூரணம்

அகஸ்தியர் தரு வேறு

எந்தவூர் எந்ததேசம் பாலனே
எனக்கரிய சொல்லுஞ்சிலனே
இந்த மலைமீதில் என்வந் திருக்குறாய்
அந்த விபரத்தை அரிய உரைத்திடாய்

சுப்ரமண்யர் தரு

தாய்தந்தை ஒருவரு மில்லையே
சாற்றவும் இதுபெருந் தொல்லையே

வாய்பிடிங்கி யென்னை மாராட்டங் கொள்ளுறாய்
வந்ததுந் தந்ததும் நின்றதும் மைந்தன் தான்

அகஸ்தியர் தரு

மைந்தனென்று சொல்லுஞ் சிறுவனே
மருந்தொன்றிருக்குது தருவேனே
இந்த அவிழ்தத்தை இன்பமா யுட்கொண்டால்
அந்தக் கைலாயம் அன்புடன் சேரலாம்

சுப்ரமண்யர் தரு

மருந்து குணந்தெரிய முனிவனே
மணிநேர மாகுமோ கனிவனே
இருந்தயாலும் பார்த்து என்னவிழ் தந்தாரேன்
பரிந்துநீ சொல்லுவாய் பாங்குள்ள ரிஷியோரே

அகஸ்தியர் தரு வேறு

பையலேநீ சொன்னதினால் அய்யனும் அவிழ்தந்தாரேன்
மதத்துவாய் நீயும் நத்துவாய்
கையினில் உள்ளங்கனிபோல் மெய்யெனத் தெரியும்படி
காட்டுவேன் யானும் ஊட்டுவேன்

சுப்ரமண்யர் தரு

ஊட்டுவே னென்று பூச்சி காட்டியே மிரட்ட வேண்டாம்
நீருமே மருந்தைத் தாருமே
பாட்டனுடன் பூட்டன்முதல் கேட்டிடயென் அவிழ்தத்தை
அஞ்சுவார் யாருங் கொஞ்சுவார்

அகஸ்தியர் தரு

கொஞ்சுவார்களென்றுசொல்லி மிஞ்சியேநீ பேசவேண்டாம்
கேளுமே கேட்டு மீளுமே
கஞ்சனை சிறையில்வைத்த செஞ்சொலெந்தன் தேசிகரின்
தீரமே உண்டு பாருமே

சுப்ரமண்யர் தரு

உண்டொரு மூகூர்த்தமாக கண்டிலேன் ஒருபலனும்
உத்தமா பரி சுத்தமா
அண்டர்கள் பிணியகற்ற கொண்டிரை யெழுந்தமுதம்
கொள்ளுமே பதில் விள்ளுமே

அகஸ்தியர் கவி

என்னநான் செய்வேனையோ இந்தஜோர் பாலனைகையில்
முன்னும்பின் னறிந்திடாமல் மொழிவசை யுரைத்துவீணாய்
அன்னீத மாகசிக்கி அவதிகள் படவுமானேன்
பன்னரும் திருப்போரூரா பக்தியின அருளீதானே

ஷை தரு புலம்பல்

ஆதி சிவனுக்கொப்பாய் அகஸ்தியர் ஒருவரொன்று
அதிகமாய் பேரெடுத்தேன் மகாதேவா

பாதிமதியணிந்த பாமனருளினாலே என்னை
பகைத்தவருலகிலில்லை மகாதேவா
சப்தரிஷிகளிலே உத்தமன் நானென்று
தாலத்தில் கீர்த்திபெற்றேன் மகாதேவா
சிந்தை மகிழ்குருவே உந்தனருளிதுவோ
சிறுவனைகை சிக்கலானேன் மகாதேவா
சொந்தமுள்ள மருந்தால் அந்தரம் போகவெண்ணி
துரிதமாய் கொடுத்தேன மகாதேவா
கந்தன் அருளைப்பெற்ற எந்தன் மருந்தைதின்று
காலனைப்போல் நிற்கின்றானே மகாதேவா

சுப்பிரமண்யர் கவி

துக்கம்நீ கொண்டாலென்ன சொன்னதோர் வார்த்தைப்போல
பக்குவமாகப் பாலன் பக்ஷமாய் அமிழ்தந்தாரேன்
இக்கணம் பதிலசொல்லாமல் இன்பமா யருந்தவேண்டும்
வெக்கமகெட டவனைப்போல வீண்வார்த்தைப் பேசொணாதே

வசனம்

ஆனால் கேளும் அகஸ்தியனே நீயென்ன துயரங் கொண்டாலும் விடமுடியாது இதோ என்னுடைய பிரேகாம்ஸமாகிய அமிழ்தந் தந்தேன் சாப்பிடும் அகஸ்தியனே.

அகஸ்தியர் தரு

அய்யனே நானிந்த அமிழ்தத்தை சாப்பிட
அந்தரம் போகுறேன மைந்தர்களா
செய்யனே உன்னிட சித்தமிதுதானோ
சிறுங் குலையலானேன் மைந்தர்களா

சுப்ரமண்யர் தரு வேறு

பொதிகை முனிவன்வாடி புலம்பிட பூர்வக்கியானந் தந்தேனே
பதியி லிரங்கும்படி பக்ஷம் பெருகிமனம் உகந்தேனே

அகஸ்தியர் தரு

காரணி ஸ்ரூபனே ஞானஒளி தீபமே பணிந்தேனே
காரணங் கடந்திட பூரண குருவேயான் கனிந்தேனே

சுப்ரமண்யர் தரு

வந்தனம் புரிந்திட்ட சிந்தைமகிழ் திடனே வாசவாயே
கந்தனுப ஞானங்கள் தந்தேனெந்தனின் அருள் பெருவாயே

பொது வசனம்

இவ்வாறாக சாக்ஷாத் ஸ்ரீ சுப்ரமண்யருடைய அமிழ்தத்தால் ஆகாயத்தில் சென்ற அகஸ்தியர் பாதவிக்ரவும் சுவாமியானவர் பூர்வக் கியானம் உதயமாகும்படி தனது திருவுள்ளத்தில் நினைக்க உடனே அகஸ்தியருக்கு ஞானோதயமாகி கடவுளென்று துதித்துககொண் டிருக்கிறபோது மூர்ச்சையாகி கிடந்த இடும்பாவதி கடம்பனும் மூர்ச்சை தெளிந்து புலம்புகிற விதங் காண்க.

இடும்பாவதி புலம்பல் தரு

ஆசை நாயகரே மோசம் செய்திடவென் ஆவி சோருதே
ஆவிசோருதே நான் யாவியேகினேன் என் (ஆசை
நாசக்காலம் வந்து நலிந்திட லாச்சு
நாணு விதவையாகி மெலிந்திட லேச்சு
காசினி லெந்தன் கணமது போச்சு
காலக்கெதியோவெந்தன் மாலை யிழக்கலாச்சு
அய்யோ தெய்வமே எனக்காக தெய்வமே
சதிகாரத் தெய்வமே சண்டாள தெய்வமே என்னை
சாருந்துணை யாருமின்றி பாரில் வாடுறேன் என் (ஆசை

கடம்பன் தரு புலம்பல்

இந்தவிதி காணவோ உந்தனுடன் பிறந்தேன் எந்தனண்ணா
ஈசன் செயலிதுவோ நாசம் வந்துவிளைய எந்தனண்ணா
கந்தன்கை வேலுக்கு யிந்தநாள் வரையிலும் எந்தனண்ணா
தந்திரமாய் தப்பி வந்து மடியலானீர் எந்தனண்ணா
மந்திர தந்திர மாய சித்துகளெல்லாம் எந்தனண்ணா
எந்த விதமறந்து இறக்கத் துணிந்தாயோ எந்தனண்ணா
சிந்தை வாடுதே குரு தேசிகர் தனக்காணும் பதனியாரே
அந்தரந் தன்னிலே அவர்குரல் கேழ்க்குதே மதனியாரே

அகஸ்தியர் தரு

அபயம் அபயமையா சுவாமி ஆறுமுகவனே உமக்கபயம்
உபய பாதமே கெதி சுவாமி ஓங்கார ஸ்ரூபனே உமக்கபயம்

சுப்ரமண்யர் தரு

அபயஸ்த தந்துமே அகஸ்தியர் தவித்திட
அழைக்கவெனது கோபந் தணிந்தேனே
தழைக்க உள்ளமதுவுங் கனிந்தேனே

அகஸ்தியர் தரு

ஓய்யார மானையென் குருநாதா உந்தன் மகிமையைத் தெரியாமல்
செய்யாத காரியஞ் செய்திட்டேன் சித்தம் வைத்துக்காரும்
[உத்தமனே

சுப்ரமண்யர் தரு

அந்தரந் தன்னிலே வந்துநீ வருந்திட
அன்பு பெருகிவரச் செய்தேனே
தன்பெரும் ஞானம்வர பெய்தேனே

இடும்பாவதி கவி.

குலமதைவிளங்கச் செய்யுங் குழகனே யிவர்தானுகும்
கலங்கியே தவிக்கலானேன் கன்னியாளெந்தனுக்கு
உலகினில் துணையுவேறு ஒருவருமல்லையையோ
நலம்பெற மாங்கில்யபிச்சை நத்தியே கேழ்ப்பேன்யானே

இடும்பாவதி வசனம்

அரகரா சண்முககாதா சூரர்களை கருவறுத்த சுப்ரமண்ய தேவா! தங்களுடைய வேலுக்கு பயந்து நாங்கள் மூவரும் சிவதவம் புரிந்தும் மறுபடி அகஸ்திய முனிவரால் உபதேசம் பெற்று தங்களையே பூஜித்து வந்துப் இப்போது சிறுபிள்ளையாக வடிவெடுத்து வந்ததை என் புருஷர் தெரியாமல் செய்த குற்றத்தை பொருத்து எனக்கு மனம் குளிரும்படியாகவும் எப்போதும் தங்களை இடைவிடாமலும் இருக்கும்படியாயும் மனம் குளிர்ந்து எனக்கு முந்தாணி பிச்சை அளிக்கவேண்டும் சுவாமி சத்துரு சங்கார மூர்த்தியே.

இடும்பாவதி தரு

கந்தரே கதிர்வேலரே கன்னியாளெந்தனையும்
சிந்தைவைத் தாதரியும் திருவடி வந்தனம்

சுப்ரமண்யர் தரு

எந்தனின் தாள்பணிந்ததால் இன்பம் பெருகியோங்க
உந்தனை ஆசிர்வதித்தேன் உத்தமி வாழி

கடம்பன் தரு

உன் மகிமைத்தானறியா ஓடியே அலைந்தேன் சுவாமி
என் மனத்துயரந்திரும் ஏற்றிபோற்றினேன

அகஸ்தியர் தரு

அய்யனே மெய்யனே உந்தன் செய்யமலர் பாதமதில்
அகஸ்தியன் பணிந்தேனையா குருநாதா

சுப்ரமண்யர் தரு

ஆதிமறை யோதியுணர் அன்புறும் குருமுனியே
வாதையின கடம்பனோடு வாழ்ந்திருப்பாயே

இடும்பாவதி தரு

தீங்கிலா திமைபாலனே நாங்கள்செய்த பிழைபொருத்து
மாங்கிலிய பிச்சைதாரும் மாலமருகா

சுப்ரமண்யர் தரு

செய்யாத காரியத்தை செய்தானே உன்கணவன்
சித்தமுடனவில்லையே உத்தமியாளே

கடம்பன் தரு

பையரவ பூஷணியன் துய்யமறை தேசிகரே
உய்யுமெங்களுக்கருள் புரிவீரே

அகஸ்தியர் தரு

பொய்யான வாழ்வைநம்பி செய்யாத குற்றஞ்செய்தோம்
புந்திநைத தெளுப்பிடுவீர் குருநாதா

சுப்ரமண்யர் கவி

ஒப்பிலா திருமூவோரும் உரிகிய அதிக்கிரங்கி
தப்பிலா பக்திபூண்ட தையலா ளிடும்பாதேவி

செப்பெருந் தனநாதன் சேவடி போற்றிவாழ
இப்பவே வாகினைத்தேன் இடும்பனே யெழுந்திடாயே

இடும்பன் தரு துதித்தல்

சரகணபவனே சண்முகனே சம்போசங்கரன் தன்மகனே
அரவணை துயில்வோன் மருகோனே ஆண்டருள் புரிந்திடும் [முருகோனே
வல்பிணி மாரணந் தீர்ப்பவனே தொல்வினை யகமதியே [காப்பவனே
சத்துசித்தாநந்த மானவனே மூத்திதரும் கல்மோனவனே
அருமறை முடிவினி லுரைபவனே அன்பர் துதிக்கு [முனங்கரைபவனே
குமாமகள் குஞ்சரி மகிழ்பவனே தரமிசை சேதனர் புகழ்பவனே
திருவுருவாகிய தேசிகனே ஜின்மயாநந்த மோனவாசியனே
மருமலர் பொன்னடி யேற்றினேனே மங்கை கடம்ப இடும்பன் [போற்றினேனே

இடும்பன் கவி

திருவருள் பெருகியோங்கும் தேவனே தேசிகர்க்கு
பொருவரு பூசைசெய்ய புகழ்பொருங் கிரியையெடுத்தேன்
தருபொருளின் ஞானந்தந் திடுமுதலே யெந்தன்
இருவினைப் பயனொழித்து எளியோரை யாட்கொள்வீரே

சுப்ரமண்யர் தரு ஜம்பை

இணையடி பணிந்துநின்ற இடும்பனே உன் தம்பியுடன்
துணைவனுக யென்னருகில் துதியோங்க வாழ்ந்திருப்பாய்

இடும்பன் தரு

கோவணமுந் தண்டேந்தி குறையகலும் கைலைவிட்டு
தேவருடன் மூவர்புகழ் சிவகிரியில் நின்றதென்ன

சுப்ரமண்யர் தரு

நாரதருந் தந்ததொரு நலம்பெருகும் மாங்கனியால்
வேறுபட்டு கோபமுடன் வேடமது கொண்டுவந்தேன்

இடும்பன் தரு

மைந்தனென்று நானுந்தன் மாய்கைதனை யறியாமல்
நிந்தனைகள் செய்ததெல்லாம் நீர்பொருக்க வேண்டுமையா

சுப்ரமண்யர் கவி

குறையது உங்கள்மீதில் கொஞ்சமு யெனக்குயில்லை
தரைமிசை யென்றும்வாழ தயவது புரிந்தேனப்பா
நரையெரு தேருகிறை நாரியோர் பாகனின
இறையவன் தன்மேல்கோபம் யெப்போது மாறிடாதே

பொது வசனம்

இப்படியாக ஸ்ரீ சுப்ரமண்யர் அஸ்தியர் இடும்பன் கடம்பன் இடும்பாவதி ஆகிய இவர்கள் சூழும்படியாக சிவகிரிமலையின்

மீதில் இருக்கின்றபோது மாங்கனிக்காக கோபித்துச்சென்ற வடிவேலன் அநேக நாளாகியும் காணுமென்ற ஏக்கத்தோடு பரமன் பார்வதி வருவது காண்க.

பரமன் வருகிற கவி

வேதமுடி வாகிநின்ற விமலபோதன் மெஞ்ஞான
தீபவொளி வானநீதன்
சிதனுன் முககமெதர் அஷ்டபாலர் சித்தர்முத்தர்
பத்தரெல்லாங் காணுபாதன்
காதலமிகும் கங்கையுடன் திங்கள்பாணு
கட்செவியும் புலியாடை யணிந்தநாதன்
ஆதரவா யுமையவளும் இட த்திலங்க
ஆறுமுகனை நினைந்தீசன் வருகின்றுரே

தரு

சந்திர சேகரர் வந்தனர் — சாகரஞ் சூழ்புவி சிலகோடிசட்கு
வந்து வரங்கள் தந்தவர்
சிந்தையில் துதிப்பவர்க்கு — ஜீவதார உருவாம்
பந்த மகனறவர்க்கு — பாக்கியந் தரும் அருவாம்
சுருள்] படிமிசை தன்னிலே — குடியது கொண்டவர்
மிடியதைத் தீர்த்திட — வடிவுடன் நின்றவர் (சந்
நரியைப் பரியாய்ச்செய்தவர் நாநிலந் தன்னிலே மாணிக்கவாசகர்
இருதயந்தன்னி லுய்தவர்
கரியை யுரித்தணிந்தோர் — கையில் சூலம்பிடித்தோர்
எரியும் மழுதாங்கியோர் — வரிபுலியை வதைத்தோர்
சுருள்] மீரிய முயலகன் — மீதில் நடித்தவர்
தேரிய முனிவர்க்கு — வேதம் படித்தவர் (சந்
துரியநிலை யரிந்தவர் — தூமறைமீதினில் ஓமெனும் பொருளாய்
பிரியமுடன் நின்றவர்
திருக்காளத்தில் வாசர் — திண்ணன் தனக்குநேசர்
அருணாசலத்தின் தேசர் — அரசன் தனக்குப்பாசர்
சுருள்] அங்கையர்கண்ணியை — பங்கினில் கொண்டவர்
கங்கையுந் திங்களுந் — தங்கிடும் பண்டவர் (சந்
மாலயன் காணுபாதனும் — மகபதியோருக்காய கமதுகளித்துமே
ஆலங் குடித்தநீதனும்
காலனை தன்னையுதைத்தோர் — மேலும் வரமளித்தோர்
பாலன் ஆதி மூலம்சொல் — பாடற் ககம்பதித்தோர்
சுருள்] பாருல களந்திடும் — நாரணன் தங்கையாள்
பேருடன இடமதில் — சீருடன் விளங்க (சந்

பரமன் கவி

தாலத்தின் மாந்தருக்குத் தண்ணருள் புரியவேண்டி
கோலமாம் கொலுவிலவந்தோம் குமரேசன் மாங்கனிக்காய்

மேலவுங் கோபத்தோடு மீரியே சென்றுஞ்சேதி
காலத்தில் அரியவேண்டுங் கன்னியை அழைத்தவராய்

பாவதி வருகிற கவி

மேருவின் சிலைபிடித்த விதகசப் பிராணநாதர்
காருண்ய மாயழைத்த கருத்தையு மரியவேண்டி
சீருள்ள பணிகள்பூண்டு சேடிய ருடனேகூடி
பாருள்ளோர் துதித்துமேற்ற பார்வதி வருகின்றாளே

பார்வதி தரு

வந்தேன் பார்வதியென்னும்மாது மன்னவர்பக்கல்
வாரேன் நாரணியென்னுஞ்சாது
வந்தேன் பார்வதிமாது அந்தரி யிவளென்றோது
சுருள்] வாமிதன மனேசிவ சரியுமென்பவள்
பூமி சையன்பர்க்கு தாமருள் புரிபவள் (வந்
மகிடன்தனை வதைத்தமாரி மாநிலந்தன்னில்
மக்கள் பிணியகற்றும காரி
அகிலமயப்ராதாபி அவனி யளிக்கும்ரூபி
சுருள்] ஆரண விளங்கிடும் காரண மங்கை
பூரணைகிய நாரணன் தங்கை (வந்
சண்டன் முண்டனைக் கொன்றநீலி நிசும்பனோடு
வண்டன் சும்பனை வென்றசூலி
அண்டன்தாரனை செற்ற எண்டோளி யிவளென்ன
சுருள்] தாமரை மீதினில் ரீமெனும வாசனி
ஓமெனும் பிரணவ மானவிலோசனி (வந்
சிறுதுறை கொறத்திநகர் வாசன வைத்தியலிங்கம்
சேயனுக வந்துதித்த நேசன்
பெருமை விறப்ப தாசன் பேசும் கதைக்கருள
சுருள்] பெருமையா ருட்டியே வருமையை போக்கிடும்
அருளதைப் புரிந்திடும் திரிபுர சௌந்தரி

பார்வதி தரு

சரணஞ்செய்தேன் நாதனே தருணமிது வேதனே
கருணைவளர்ப் பாதனே சாக்ஷித்தாளும் நீதனே

பரமன் தரு

கிரியரசன் நங்கையே கிள்ளைமொழி மங்கையே
கரிமுகிலோன் தங்கையே களிப்புடன்வா ழிங்கையே

பார்வதி தரு

வேதமறை வித்தனே விண்ணவர்பணி சுத்தனே
காதலிமகிழ் கர்த்தனே காங்குவித்தேன் பித்தனே

பரமன் தரு

பூதலம்புகழ் பத்தினி போற்றுவோருள நத்தினி
வேதனை விர்த்தினி வேண்டுவோர்க்கு சத்தினி

பார்வதி கொச்சகம்

சீராரு மன்னவரே ஜெகமதிலே சீவர்கட்கு
பேராதரவுடனே பிணிதீர்க்கும் பெருமானே
காராதி சூலனுக்கு கனியதைக் கொடுத்ததினால்
வேராகி சென்றகதிர் வேலவரைக் காணகிலேனே

பரமன் தரு

பலவிதத்திலும் விலைகலங்கியே பாசங் குன்றாதே
விலகில்லாவேலன் நலமும்பெருகுவான் வேறு யெண்ணாதே

பார்வதி தரு

உலகில் சீருடை அறுமுகவனால் அங்கம் வாடுதே
மலர்முகந் தன்னை தலமினைசக் காண மனமுந் தேடுதே

பரமன் தரு

மோனமுத்தமிழ் ஆனைமாமுகன் மூர்த்தியல்லவே
மானநேர்விழி மயிலவனுந்தன் மனது கல்லவே

பார்வதி தரு

தானதத்துவம் காணுமெய்ப்பொருள் சத்திவேலனே
கானமறைமுதல் தோணுதிருமூர்த்தி நததுஞ்சீலனே

நாரதர் தரு வேறு

அருவுருவாகிய தேவனே அங்கையர்க் கண்ணியாள் பாவனே
வருபவினை தீர்த்திடும் பெரும்பொருளே நீங்கள்
திருமுகம வாடியே இருப்பதென்ன பணி

பரமன் தரு

பணிமிக தந்திட்ட பாலனே நீ பத்தியுடன்வாழுஞ் சீலனே
தணிகை வேலனாலே சஞ்சல மிகஉண்டு
துணிவுடன் வந்ததை சொல்லுவாய்நீ கண்டு

பார்வதி தரு

திரிலோக வாசியே வாருமே வந்த சேதியுரைத்திடு நீருமே
பரிவான கனிதந்தாய் பாலன்வேறாகிட
எரிகொண்டு வந்தாயே கரியுதே மனம்உன்னாலே

நாரதர் தரு

எரிகொண்டு வரவில்லை அன்னையே என்மீதில் பிழையுண்டோ [பின்னையே
சரியான விதம்போல சங்கரர் நடந்தாலே
பிரியவும் நேருமே பேசுவீரென்பாலே

பரமன் தரு

தந்த மாங்கனியின் போக விந்தை மிகசெய்தாய் சீராக
கந்தன் மனமது கலகப் படும்படி
இந்த வேலைசெய்தாய் இதுவேதான் சொற்படி

பார்வதி தரு

அப்பனே நாரதா கேளுமே யிந்த அகிலஞ் சுற்றிவந்தாய் காணுமே
தப்பிலா வடிவேலன் சங்கதி தெரிந்தாலே
இப்போ தெனக்குநீ எடுத்துஉரை மேலே

நாரதர் தரு

அரவபூஷணி சர்வ புவனகாரணி
அறுமுகன் சேதிதன்னை அரைவேன் நாரணி
சுருள்] அவனியை சுற்றி சிவகிரி வழியதாய்
கவனமாக வருகையில் தவமுடன் கண்டேன்

பார்வதி தரு

கண்டேனென் றுமே யின்று விண்டதுண்மையோ
காணமல் யிவகுவந்து சலக்க தின்மையோ
சுருள்] கன்னியா வென்மனம் உன்னியே உருகுதே
துவனிய மேனியும் வின்னமாய் கருகுதே

நாரதர் தரு

தந்தைதபேரிலே அவர் நிந்தை கொண்டுமே
விந்தசிவ கிரிமீதில் வந்துநின் றுமே
சுருள்] விருள்ள யிடும்பனை பாரினில் வீழ்த்தியே
சிருள்ள முனிவனை திசையினி லாழ்த்தியே

பார்வதி தரு

அகாமரிந்தவா யிந்த அகிலந்திரிந்தவா
இகபாரத் திச்சையெல்லாம் என்றுந் தாந்தவா
சுருள்] எகுவோ நாமுமே வேகமதாகவே
வாகுடன் நீயும் தோகைக் குறைத்திடாய்

நாரதர் கவி

அருள்பெருகும் வடிவேலர் யிசன்கோபம்
ஆற்றுது தெர்க்குமுகம் வருகும்போது
குருமுனியின் ஏவல்படி இடும்பாசூரன்
குன்றெடுத்து வருகஅதன் மீதிலேரி
பொருசமரில் அவனுடலைப் பூமில்வீழ்த்தி
பொதிகைமுனி தனைவிசும் பிற்போகசெய்து
திருவுளமும் மகழ்ந்திருக்கக் கண்டேனம்மா
தேவிவள்ளி தெய்வானை மணைக்குப்போரேன்

வள்ளியம்மன் வருகிற கவி

கொடிமின்னுள் இடையுந்துன்ன கோதையும் பட்டுடுத்தி
துடிவுள்ள ரதியோவென்று தோகையர் மகிழ்வுகொள்ள
வடிவுள்ள நகைகள்சேலை வஞ்சியாள் மிகவும்பூண்டு
இடிமின்னல் ஒளியாள்வள்ளி ஏந்திழை வருகின்றாளே

வள்ளி தரு

வடிவேலர் தனக்குப்பாரி வஞ்சியர்க் கதிசிங்காரி
வள்ளியம்மனிதோ வந்தேன் வானகம் தன்னிலே
கூவிடும் குயில்போல் (வள்ளியம்
கடின கந்தர்பாதத்தை கண்டு துதிக்க வல்லாள்
அருள்] காரணி யிவளென்று யாவரும் போற்ற
தாரணி தன்னிலே மாதர்களேற்ற (வடி
ஆரம் சரப்பளியும் அணிந்த பணிகள்மின்ன
அருவையும் காணிதோவந்தேன ஆசையாய்மாதர்கள்
பேசியே வரவே (அருவையும் கா
பாரதில் புகழ்பெற்ற பார்த்தவர் மகிழ்வுற்ற
அருள்] பாசகமுடன் வெகு நேசத்துடன்பணி
விசித்தெதிர்பட கூசவே கண்கள் (வடி

வள்ளி தரு

ஆசைநாதன் மூன்றுநாளாய் அரண்மனையில் காணேனடி
மோசம் செய்து போய்விட்டாரே மோடி என்னமோ
பாசமாக தெய்வானைமாது பசப்பு காட்டியே அங்கே
பன்னிருகை வேலர்தன்னை பார்த்து வருகுறேன் (ஆ

தெய்வானை கவி

இந்திரன் தந்தமாது இனியதோர் மதுரமுள்ளாள்
சந்திர முகமிலகை சண்முகர் தேவியான
விந்தைசேர் வேலன்தன்னை விரும்பிய மூன்றுநாளாய்
கந்தனைக் காணேனென்று கன்னி தெய்வானை வாரேன்

தரு

கந்தன தனக்குபாரி கருணை பொழியும்காரி
விந்தையாய் தெயவானைமாது வேல்விழி வாரேன்
அந்தமுள்ள ஆடைபூண்டு அன்பு மிகவே கொண்டு
சிந்தையுடன் தாதிசூழ சேயிழை வாரேன்
கந்தம் களபம்பூசி காரிழை மிகவிஸ்வாசி
சிந்தையுடன் யாரும்போற்றும் சேயிழை வாரேன்
பாலன் ஆதி மூலத்திர்க்கும் பார்க்கும்சபையோருக்கும்
வேண வரமளித்து வித்தகி வாரேன் (கந்

தெய்வானை கவி

ஆடிடுமயில் மீதேறும் அறுமுகர் மூன்றுநாளாய்
கூடிட வரவுங்காணேன் கோதையா னென்னசெய்வேன்
வாடியே தவித்துயானும் வடிவேலர் தன்னையிப்போ
தேடியே தமக்கைவீட்டில தெய்வானை வருகின்றாளே

தரு

ஓடிவா ஓங்கார ஆங்கார ரீங்கார பிரணவ வேலா
ஆடிமயில் மீதேறி அன்பத்தோ ரட்சரமாய்
வாடி தவிக்கயானும் வேடிக்கையோ உமக்கு (ஓடி

அருமுகா ஓம் ஐயும் கிலியும் சவ்வும்
சரவணபவனே சண்முகா
மறுவும் சடாக்ஷரமாய் மாதாவின் உயிரெழுத்தாய்
உருவம் அட்சாட்சரமாய் ஓங்கி எழுந்தவனே (ஓடி
அய்யனேஓம் அகாரஇகார உகாரம் கொண்டிடும் மெய்யனே
அய்யனே பஞ்சாக்ஷரத்தி துலங்க பெரியாய் வந்தாய்
மெய்யனே ஆதிமூலம் அய்யா அவரை காக்க (ஓடி

தெய்வானை கவி

அக்காள்உன் பாதம்தன்னை அருவையும் நமஸ்கரித்தேன்
எக்காலும் பிரியாகாதன் தங்கையோ காணேனம்மா

வள்ளி கவி

மூர்கிய மாகசுவாமி முருகனை நானும்தேடி
பக்குவ மாகதங்கா பாரினில்லையுரேனே

தெய்வானை தரு

அய்யோ நானென்ன செய்வேன் தமக்கயரே
ஆரூ துயருகுதே தமக்கையரே
நையுதே எந்தன் மனம் நானென்ன செய்வேனம்மா
பொய்யான ராக்ஷதர்கள் போர்செய்து கொன்றுரோ (அய்

வள்ளி தரு

சத்துசித்தா நந்தபொருள் சங்காரர்க்கு மேலானவர்
உத்தமி ய்ராசத்தியும் உதவிசெய்ய வேலுமாகி
சத்துரு சங்காரவேலன் உத்தமிஎன் தங்கையரே
சித்துசெய்யும் ராக்ஷதரை வெற்றிவேலர் சங்கரிப்பார்

நாரதர் தரு

வள்ளிதன்னை தேடியே வருகிறேனிதோ ஓடியே
புள்ளி மயிலாளர் உள்ளத்தை சொல்லியே
விள்ளவ்வ இப்போது கள்ளத்தைப் போக்குவேன்

வள்ளி தரு

வாரும் நாரதரே வளர் போதகரே
சிறுடனேமுருகர்சேதி சீக்கிரம் எனக்குஓதி
செப்பவிம் தாமதமா என்மேல் வர்மமா (வா

தெய்வானை தரு

சொல்லவே உன்மனங் கண்டேன் சூக்ஷியம்
பாவையிம் கொண்டேன்
சொல்லும் கதிர்வேலனை சென்றுநான் பார்க்கவேண்டும்
அலலல் தனையொழித்து அவரை யிருக்க தூண்டும் (சொ

நாரதர் விருத்தம்

அம்மாஉன் பிராணநாதர் அருள்வடி வேலர்தானும்
செம்மைசேர் மழுமாணேந்தும் சிவனிடம் கோபமாகி

வம்புசெய் கனிஒன்றாலே வடிவேலன் தண்டேந்தி
தெம்புகொண்டிடும் பாலன்போல் சிவகிரி சென்றாரம்மா

வள்ளி தரு

கந்தனைகாணவே மனம் நாடியே
கன்னியரும் உன்னிதமாய்
கன்னிகாங்கள் வாரோம்செல்வோம் கூடியே

தெய்வானை தரு

தமக்கையே நாரதனுடன் செல்லுவோம்
உன் தங்கைநானும் இங்கிர்தமாய்
தாவியே அவ்விடம்போக விள்ளுவோம்

வள்ளி தெய்வானை தரு

மாமன மாமி இருவரிட பாதம் வந்தனம்
மன்னவனைக் காணுதாலே மனது நொந்தனம்

பரமன் பார்வதி தரு

வஞ்சியரே இருவருக்கும் வாழி தந்தனம்
வடிவேலனை தேடிபோக வாரும் நீங்களும்

வள்ளி தரு ஓடி

அத்தையரே எங்களிட அருமையுள்ள நாதனெங்கே

பார்வதி தரு

பத்தியே வள்ளியரே பாலகனை காணேனம்மா

தெய்வானை தரு

காணேனென்று சொலலவேண்டாம் கணவனெங்கே மாமியரே

பார்வதி தரு

மாங்கனியால் மனதுநொந்து மைந்தன்போனான் கோபமுடன்

பரமன் கவி

கன்னியே நீங்களிப்போ கலங்கியே வாடவேண்டாம்
உன்னித வேலனை தன்னை உகந்துமே அனுப்புதற்கு
தன்னிகர் இல்லாவேலன தனிமையில் சென்றதாலே
நன்மைய மாககூடி நாரதா செல்லுவோமே

நாரதர் தரு

வருகஎனக்குத் தடையில்லையே வகுத்து உரைத்திட தொல்லையே
சிறுபிள்ளை வேலவர் சீறுவார் எனைகண்டால்
திருபுர பெரியீசா சேருவீர் சீக்கிரம் (வருக

பரமன் தரு

இந்த விதமாக சொல்லாதே இடருவருமென்று நில்லாதே
கந்தனிருந்திடும் விந்தை கிரிதன்னை
சந்தோஷமாகவே வந்துநீ காட்டுவாய் (இந்த

பார்வதி தரு

நாரதா இதுவென்ன கோலம்    நான் பாதகனித்திட காலம்
சீதாய் பின்வந்து    செல்வனை காட்டுவாய்
சாமதா புதல்வனே    சஞ்சலம் ஓட்டுவாய் (நாரதா

வள்ளி தரு

சொல்வது சரியல்ல மாமுனி    சுருக்காக செல்லுவோம் காமினி
வல்லஎன் காதலை    வந்துநீ காட்டுமே
அல்லது உந்தனை    அருவையும் விடமாட்டேன் (சொ

தெய்வானை தரு

என்ன தந்திரமிது மாமுனி    எல்லோரும் ஏகுவோம் வாரும்நீ
சொன்ன கிரிதன்னை    சுருக்காக காட்டுவீர்
நன்மைய மாகவே    நங்கையும் விடமாட்டேன் (என்

நாரதர் தரு

அய்யய்யோ யென் செய்வே னம்மணி    அங்கே
அலையுருர் அகஸ்தியர்    நன்மணி
பையவே யிடும்பனும்    பாவையும் சுதருருள்
நையுதே என் மனம்    நானங்கு வரமாட்டேன் (அய்

பரமன் கவி

வேதனு மகிழ்ந்தளித்த வித்தக முனியேபோகும்
பாதையுந் தெரியவில்லை பகூம்மைத் தெங்களுக்கு
தாதவிழ் மாலைபூண்ட சண்முகன் தங்கிநின்ற
காதல்சேர் இடத்தைஎன்றுய் காட்டுவா யரியத்தானே

நாரதர் தரு

வாருங்கள் என்பின்னே    நீங்கள் நாடியே
வடிவேலனை சடுதியில்காண
சேருவோம் சிவகிரி    தன்னைதேடியே

பரமன் தரு

நாரதா நீமுன்னே போவாய்    சீரதா
நங்கையாளும் இங்கிரதமாய்
சீதாய் நடந்துவாரோம்    பேரதா

பார்வதி தரு

பாரதி மகிழும்வீணை    முனிவனே
பலவிதமாய் விளங்கிவாழும்
காரதி வனமுந்தாண்ட    துணிவனே

நாரதர் தரு

மேருவை விட்டுமே நீங்கி    வந்தோமே
பக்தர் மூத்தர் சித்தர்கள் சூழ
ஆறுமாமுகவன் சேவைக்    கண்டோமே

வள்ளி தரு

தங்கையே பாமுனி கூடவந்தோமே
தணிகைநாதர் சன்யாசமாக
மங்கையேயாம் பார்க்கமனம் கொண்டோமே

தெய்வானை தரு

அய்யய்யோ நானென்ன செயவேன் காதரே
அலங்கோலமாய் மனம்கலங்க
அருவையும்நான் வாடலானேன் வேதரே

நாரதர் கலி

அத்தியை உரித்தரித்த ஆண்டவா உமையாளோடும்
பத்தினி இருவரோடும் பலபல தேசம் தாண்டி
சித்தர்கள் பெரியோர்கும் சிவகிரி அருகில்வந்தோம
சத்திவேல் பிடித்தகுமா சம்மாரன் தனையழைப்பீர்

வள்ளி தரு

ஆசையுள்ள மன்னவரே அரியாத பாலனைப்போல்
தேசம்விட்டு சன்யாசியாய் இந்தசிவ கிரியில் நின்றதென்ன

சுப்ரமண்யர் தரு

பாசமுள்ள வள்ளியரே பரமனிடம் மாங்கனிக்காய்
வேஷம்கொண்டு கோபமுடன் வேகமதாய் வந்துவிட்டேன்

தெய்வானை தரு

ஆறுமுக மானசுவாமி அடியாளை தனியேவிட்டு
வேறுரூபம் கொண்டுவந்து விதிவசம்போல் நிர்ச்சலாமா

சுப்ரமண்யர் தரு

தேனே தெய்வகுஞ்சரியே செயதவர் என் தந்தையாகும்
மானேஎந்தன் பெண்மயிலே மாங்கனியால் இங்குவந்தேன்

வள்ளி தரு

என்னமாய் துணிந்துவந்தீரோ எனைபிரிந்து
மன்னவா எப்படி வந்தீரோ
சின்னஞ் சிறுவயதில் என்னைவந்து மாலையிட்டீர்
அன்னை தந்தை யோடுவந்தேன் எந்தன்கூட வாரும் சுவாமி

சுப்ரமண்யர் தரு

உன்னைகேட்டு நானும்வல்லையே வள்ளிநாயகி நீ
உரைப்பது மிகவும் தொல்லையே
என்னை கேட்டாயேமானே இன்பமில்லடி தேனே
வர்னக்கிளியே அங்கு வரமாட்டேனிநானே

தெய்வானை தரு

ஆசையுள்ளபிராண நாதரே எனைபிரிய
அன்பு வந்ததோ வேதரே
தேசாபாசங்கள் விட்டு தெரிவையாளிடம்தொட்டு
கூசாமல் நீரும்வாரும் குகனே பன்னிருகையா

சுப்ரமண்யர் தரு

வள்ளியே தெய்வானை மாதரே உங்கள்மேல் குற்றம்
வாருமென் றும் சமேதரே
வெள்ளிமலைவாழ் கர்த்தன் விமலன் செய்தாரேகுற்றம்
உன்னதை சொன்னேன்சீற்றம் ஒருகாலும் வரமாட்டேன்

பார்வதி கவி

ஆறுமா முகனேபாலா அமரர்கள் சூழும்வேலா
யாருமுன் வருகில்நாங்கள் பாவைய ருடனேவாடி
திருமுன் கோபந்தன்னை நிங்களோன் கனிபோல்தாரேன்
வாருமே எங்களோடு வடிவுள்ள பாலாவாரும்

பரமன் தரு

வாருமப்பா வேலவனே வடிவுள்ளாயென் பாலகனே
பாருமுந்தன் தாயார்தன்னை பரதவிக்குறாள்

சுப்ரமண்யர் தரு

எந்தனைநீர் வந்தழைக்க சொந்தமேது உந்தனுக்கு
முந்தி கணபதியுன் மைந்தனையனே

பார்வதி தரு

மைந்தனென்று சொல்லஉந்தன் சிந்தையுந் தளரவேண்டாம்
கந்தனேநீ வந்திடுவாய் கனியுந் தருகுவேன்

சுப்ரமண்யர் தரு

வாலை பஞ்சாக்ஷரியே பாலன்சன்னி யாசியானேன்
ஞாலம் புகழும்படி நலவாந்தாரும்

பரமன் தரு வேறு

சத்திசிவ ஸ்ரூபிமேலாம் முத்திதரும் பாலா
சகலகலை போற்றுகின்ற தகளில்லாத வேலா
அத்திமுகன் ஏயெழும்புக் காதரவே சீலா
அண்ணமலைந்தன் கண்ணொளியே விண்ணமுதே வேலா

பார்வதி தரு

முத்தமிழின் வித்தகனே தத்துவத்தின் அருவே
மோனவரும் ஞானவருஞ் சரணவரும் குருவே
சுத்தஅத் விதமென்னும் சுழிமுனையின் தருவே
சூக்ஷி பெரும் ஆக்ஷியான காக்ஷி தரு மருவே

பரமன் தரு

மாங்கனியுந் தேங்கனியும் வருக்கைதரும் கனியே
மதாம்பொரு கதலியுடன் மாதுளங் கனியே
நீங்கனியும் மாங்கனியுஞ் சித்திதருங் கனியே
திராணவொளி அருணைக்கனி கருணைநிறை கனியே

பார்வதி தரு

பேரருள் புரியுங்கனி பெருகனி நீயையா
பிஞ்சகனார் நெஞ்சமுறை செஞ்சொல்மொழி தூயா

சீரருள் கருங்கனியுக் — திரங்கனியு மெய்யா
செங்கைபழ னிங்கிதமே — தங்கவேலின் கையா

பரமன் கவி

புலங்கனி முதலேழுத்தர் புசித்திடுங் கனியுநீயே
வலங்கனிந்து கரும்வேத நான்மறை கனியுநீயே
நிலந்திகழ் கனியும்விஞ்சை நின்வலக் கனியுநீயே
பலங்கனி நீயே தெய்வப் பழனிநீ வருக வருக

பார்வதி கவி

தெள்ளியக் கனியேபக்தர் சிந்திக்குங் கனியுநீயே
உள்ளுருங் கனியேஉம்பர் உணர்ந்திடுங் கனியுநீயே
விள்ளருங் கனியேதேன் சிர்வித்து விளங்கனியுநீயே
எள்ளருங் கனியுநீயே யிளங்கனியு வருகவருக

சுப்ரமணயர் கவி

கங்கையுந் திங்கள்சூடுங் கர்த்தனே கனிநீயென்று
அங்கமும் மெலிந்தழைக்க ஆற்றுறு கோபம்விட்டேன்
மங்களம் பெருகியோங்க மாமலை மீதிலென்றும்
தங்கியே யிருகவேண்டி தயைபுரிந் தருள்வாய்போற்றி

பரமன் கவி

சாரணர் முனிவர்சித்தர் தைத்தியர் உரகர்பூதர்
ஆரண வேதர்மற்ற அஷ்டபாலகரும் போற்ற
காரணமுன் பேர்மாற்றி கனிதரும் பழனியென்று
பூரணப் பெயரைத்தந்தேன் பூவையோ டிருந்திடாயே

சுப்ரமண்யர் தரு

இந்தமாதர் இவ்விடத்தில் — இருக்கலாகாதே என்
இருதயமும் வேறாகுமே — அரையப்போகாதே

பரமன் தரு

அரைந்திடும் விபரந்தன்னை — அறிந்தேன் நானுமே
உரைந்திடும் அன்பருக்கருள் — புரியவேணுமே

சுப்ரமண்யர் தரு

புரிகுவேன் தடையேயில்லை — புண்ணிய மூர்த்தியே
பூமிசை யாவர்கட்கும் — நிலையுங் கீர்த்தியே

பரமன் தரு

நிறையுங் குணக்குன்றே உந்தன் — நித்திய சேவையே
தரமீதில் சேதனர்க்கு — தந்து உய்வையே

அகஸ்தியர் தரு

அரகரா அரசரா நாதா — அம்புலி கொன்றையுஞ் சூடியபோதா
திருபுர தகனனே வேதா — தேவதேவர் துதி திருசூல நீதா
சதிர்வடி வேலவாஎந்தா — கார்த்தருள்புரிகுவீர் கங்கையின்மைந்தா
ததிமிக செய்பவர்க்கு கந்தா — சுத்தசன் மார்க்கமுள்ள
[நித்தியனே கந்தா

சுப்ரமண்யர் கவி

அப்பனே அகஸ்தியாகேளாய் அருளது தருவதர்க்கு
செப்புவேன் கடம்பாஇடும்பா தேன்பஞ்சாமிர்தப் பால்பொங்க
ஒப்பிலா காவடியையெடுத்து உயர்மலை ஏற்றிவந்தால்
கொப்பென இருவருக்கும் கூருவேன் வழியைத்தானே

இடும்பன் கவி

ஞாலமும் புகழவந்த நலமுள்ள தம்பிகேளாய்
பாலும் பஞ்சாமிர்தத்தால் பகதிகா வடியெடுத்து
வேலவர் தனக்குபூசை வேண்டியே செய்தோமானல்
சாலோக சாரூப சாமீப சாயுச்யம் பெறுகலாமே

இடும்பன் பூசைசெய்தல் தேவாரம்

அரசரா முருகாஉந்தன் அடிமலர் தனைநினைந்து
காவைசெய் பாலுந்தேனுவ கதலிசர்கரை கற்கண்டும்
புரயிலா தேங்களோந்து புனைபுரிந்து மேலாம்
மருவரும் காவடியெடுத்து மலைவலம் வருகுவோமே

இடும்பன் பால்காவடி கும்மி தரு

வேல்முருவேல் முருவேல் முருகையனே
வேண்டினேன் ஆண்டருள் பன்னிரு கையனே
பால்பழம் சர்க்கரை கற்கண் டிளநீருங்
பஞ்சாமிர்தக்காவடி கட்டி யெடுத்தேனே (வே
தொழுது உண்பவருக்கே பிறப்பில்லை
துணை கைலாயம் சிவகிரி யெல்லை
பழுது சொன்னவருக்கே எமன் தொல்லை
பாதம் பணிபவர்க்கே நமன்பயில்லை (வே
அண்ணு மலைதன்னில் என்னூர் தேவருக்காய்
ஆழ்ந்து முளைத்சுதுவே சிவன்
ஆறுபொறியும் சரகனை பொய்கையில்
அருவுரு வானதுவே
கன்னிப்பெண் கார்த்திகைப் பாலால் வளர்ந்தது
கதிகாமந் தன்னில் கரைகண்டு நின்றது
எண்ணங் கொண்ட சூரபத்மனைக் கொன்றது
ஏற்றி துதிப்பவர்க்கே வரந் தந்தது (வே
முன்னமே நாரதர் சொன்ன வள்ளிக்காக
மோகங்கொண் டோடினதே வேடர்
மூரிருவரும் வழிதன்னில் வேங்கைமா
மாகிநின் ருடினதே
திசுனுந் தினைமாவில் தேனுங்கலந்தது
தேவர்முனிவ ருள்ளத்தில் மலர்ந்தது
கண்ணப்ப நெஞ்சில் கலந்துண்டு சேர்ந்தது
காவடி பூசைக்கு 53179 முன்வந்து நின்றது (வே

அறுமுகம் பன்னிரண்டு விழியுடன் அருள்வடி வானதுவே
அன்பு கனிக்காசை பட்டுசிவகிரி அமர்ந்திடப் போனதுவே
கோலம் அதிமூலம் பாடல் சிறந்தது
குறைமற்றஅடி யார்க்கருள் தந்தது
கூறும் பிரணவ ஸ்வரூபியாய் நின்றது
குருநாதன் காவடி பால்போலகழி யாடுது (வே

கடம்பன் தரு

ஞானபரி பூரணநந்தா ; இந்த ஞாலத்துளோர்பரவும்
பாதாரவிந்தா
மோனசங்கரி தந்தமைந்தா ஆதி
முதல்வனை வந்ததிரு ஞானசம்பந்தா
கானக்குற வள்ளியின் சொந்தா பால
காவடியெடுத்து விளையாட வரந்தந்தா
ஆனைமுகனுக் கிளையகந்தா என்னை
ஆளவருவாய் பழநி ஆண்டவனே யெந்தா

பழநியாண்டவர் கவி

பணிந்திடும் பாவைசட்கும் பக்திகள் புரிவோருக்கும்
துணிந்திடும் அகஸ்தியர்க்கும் துணையான யிடும்பனுக்கும்
கனிவான கடம்பனுக்கும் காவடி யெடுப்போருக்கும்
இனிவான வரங்கள் தந்து இருந்தருள் புரிகுவேனே

ஷை கவி

பரிதியும் வியக்குமுருப பலசாலி கடம்பாயிடும்பா
விரிவான உலகமாந்தர் வினையது அகலவேண்டி
புரியும்பால் பூசைதன்னை புகழ்பெற யேற்பேன்யானும்
அருகினில் யிருந்துநீங்கள் அரும்பலி கொண்டிடுவீரே

பாமன் கவி

சத்தியும் சிவமாய்வந்த சண்முகன் சரிதைதன்னை
பத்தியாய் நாடகமதாகப் பாடினோர் ஆடினோர்கள்
இத்தரை மீதில்வாழ்ந்து ஈஸ்வரனருளைசார்ந்து
சித்தியுந் தருவார்வேலன் சிவனடி வாழ்கத்தானே

வாழி விருத்தம்

அரவரி யயனும்வாழி இம்பன்பார் வதியும்வாழி
திரமிகு கந்தனைவாழி தெய்வானை வள்ளிவாழி
புரவலர் நீதிவாழி புவியெங்குந் தழைத்துவாழி
தருமறை சரிதைவாழி தமிழ்குரு வாழிவாழி

**ஸ்ரீ பழநி ஆண்டவர் பால்காவடி நாடகம் முற்றிற்று.**

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீலக்ஷ்மி வாசன் பிரஸ், 12, அமர்ந்தவாழியம்மன் கோவில்வீதி
திருப்பாதிரிப்புலியூர், 15—5—50. C. 1000.